மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ. இரா. கண்ணப்பர்

மலர் 9] பிரமாதீச ௵ — ஆனி ௴ [இதழ் 8

[161-வது மூலிகை]

‘புளியாரைக் கீரை’

உ
முருகா.

'மூலிகை மணி'

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

ஆனி இதழில்

1.	ஆவதெல்லாம் உன் அருள் !	(பாட்டு)	...	1
2.	சோவியத் தமிழ் அறிஞரின் வாழ்த்து		...	2
3.	வெட்ட வெளிச்சமாகிறது	(தலையங்கம்)	...	3
4.	நம் நாட்டு மூலிகைகள்		...	9
5.	மது + மனிதன் = மிருகம்		...	13
6.	சித்தர் இலகு மருத்துவம்		...	17
7.	நம் நாட்டுச் சித்தர்கள்		...	19
8.	மூலிகை அகராதி		...	23
9.	ஈளை நோய்க்கு இடங்கொடேல்		...	25
10.	அனுபவம் உணர்த்தும் உண்மை		...	29
11.	நோய்களின் பெயர் அகராதி		...	31
12.	நீடூழி வாழ வழி		...	33
13.	மணி மொழிகள்		...	38
14.	சிடுகா மருந்தே சிறந்த மருந்து		...	41
15.	பலராமய்யாவிற்கு மறுப்பு		...	42
16.	ஆபத்தான நிலைமையா ? இதோ முதலுதவி		...	46
17.	நோயும்-மருந்தும்	(கேள்வி-பதில்)	...	47
18.	இதய ஒலி		...	56

தொலைபேசி எண் : 726. த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

மூலிகை மணியில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் அனைத்தும் மூலிகை மணி பதிப்பகத்திற்கே உரிமை உடையது. கட்டுரைகள், கவிதைகள் அனைத்திற்கும் எழுதிய ஆசிரியர்களே பொறுப்பு.

உ
முருகா.



ஆவதெல்லாம் உன் அருள்!

பல்லவி

திருத்தணி வாழும் திருமால் மருகா — என்
வருத்தமதைத் தீர்க்க வலக்கரம் கொடுப்பாய் (திரு)

அனுபல்லவி

உறுதுணை வேண்டினேன் உமையாள் குமரா
அருள்மழை பொழிவாய் ஆறுமுகா குகா (திரு)

சரணம்

பாவமும் புண்ணியமும் காலத்தின் கோலம்
கோபமும் தாபமும் குணத்தின் விசேடம்
ஆவதெல்லாம் உன் அருளினாலன்றோ
அனைத்திற்கும் ஆதாரம் நீயன்றி வேறோ! (திரு)

*

[கே. எஸ். ரங்காச்சாரி, கும்பகோணம்]

சோவியத் தமிழ் அறிஞரின் வாழ்த்து!

தற்கால தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வு செய்யவும், சோவியத் நாட்டில் தமிழ் மொழியை நன்கு பரப்பவும், தீவிர முயற்சி எடுத்துக் கொண்டு; அதற்கான வழிமுறைகளை அறிய தமிழகம் வந்துள்ள சோவியத் பெண்மணி,

டாக்டர். ஸ்வெட்லானா திருப்னிகோவா அவர்கட்கு,

"தமிழ் நாட்டின் தலைசிறந்த தமிழ் மருத்துவம் பற்றி"

மூலிகை மணி அறிமுகப் படுத்தி வைத்தது.

தலைசிறந்த வெளிநாட்டுத் தமிழறிஞரான டாக்டர். ஸ்வெட்லானா திருப்னிகோவா அவர்களுக்கு ஆசிரியரின் நூல்களும், சித்த மருத்துவம் பற்றிய ஆங்கில நூலும் அன்பளிப்பாக வழங்கப்பட்டபோது. அவர்கள் தமது பாராட்டுதல்களை கீழ்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருந்து தமிழ்ப் பணி ஆற்றி- தமிழகம் வந்துள்ள டாக்டர். திருமதி. திருப்னிகோவா அவர்களை மூலிகை மணி வாழ்த்துக் கூறி வரவேற்பதில் மகிழ்கிறது!

சுவெத்லானா திருப்னிகோவா,
'சோவியத் கலாசார மாளிகை'
9,1, கஸ்தூரி ரங்க ஐயங்கார் ரோடு,
சென்னை-18
7—6—1973.

திரு. வெங்கடேசன் அவர்களுக்கு,

வணக்கம் தங்கள் கடிதமும், புத்தகங்களும் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி! தங்கள் மாத இதழ் செய்து வரும் சேவை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

தங்கள் மாத இதழ் மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,
ஸ்வெத்லானா திருப்னிகோவா.

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 9] பிரமாதீச ஞூ — ஆனி மீ ஜூன்-73 [இதழ் 8

'சிவப்பு விளக்கு' தலையங்கத் தொடர்-4.

தஞ்சை சரசுவதி மகாலில் இயங்கும்
'Literary Research Unit' பற்றிய அறிக்கை தரும்
செய்திகளைப் பற்றிய ஒரு ஆய்வு :

வெட்ட வெளிச்சமாகிறது!

மத்திய அரசின் நேரடிப் பார்வையில் தஞ்சை கலெக்டரின் தலைமையின் கீழ், நவம்பர் 1964-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருவது, Literary Research Unit. சித்த, ஆயுர்வேத மருத்துவ ஏடுகளை ஆய்வு செய்து பதிப்பித்தலே தலையாய பணி. இது வரை 6 இலட்ச ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. இதுவரை நடந்த பணிகளை கண்ணோட்டம் விட்டு பார்க்கின்ற பொழுது, தோன்றும் ஒரே கருத்து ;

" சித்த மருத்துவம் ஒதுக்கப்படுகிறது !
ஆயுர்வேதம் அளவுக்கதிகமாக ஆதரவு தரப்படுகிறது "
என்பதே ஆகும்.

இந்த கருத்தினைக் கூறுவதற்கும், கூறுவதை ஏற்பதற்கும் சங்கடமாகவே உள்ளது. எனினும், இன்றுள்ள நிலையில் 'தஞ்சை சரசுவதி மகாலில் சித்த மருத்துவம் ஒதுக்கப்படுகிறது'

என்று கூற மூலிகை மணி தவிர வேறு ஆளில்லை. இந்த கட்டாய நிலைக்காகவும், 'Literary Research Unit' பாரபட்சமின்றி நடக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தை உணர்த்தவுமே இந்த தலையங்கம் எழுத வேண்டியுள்ளது.

தஞ்சை சரசுவதி மகாலில் ஆயூர்வேத மருத்துவம் வளர்ச்சி பெறுவதைக் குறித்து நமக்கு எள்ளளவும் கவலையோ, அக்கறையோ இல்லை. மாறாக, சித்த மருத்துவத்தின் வளர்ச்சியைத் தடுத்து, அதன் அழிவில், ஆயூர்வேதத்தினை வளர்க்க நடக்கும் முயற்சிகளைத் தான் நாம் எதிர்க்கின்றோம் என்பதை, வாசகர்கள் ஆரம்பத்திலேயே மனதில் பதித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

இனி, சரசுவதி மகால் நிர்வாகத்தினர் எங்ஙனம் சித்த மருத்துவத்தினை ஒதுக்கியுள்ளனர் என்பதனை, அவர்கள் அனுப்பிய அறிக்கையிலிருந்து சில பகுதிகளை எடுத்து தந்துள்ளோம்; கூர்ந்து கவனியுங்கள்.

PERFORMANCE:

A. *Works Approved by the Council and under process of Publication:*

Siddhar Kayakalpam, translation of Tamil work into Sanskrit—90 pages.

This is a work dealing with the various prescriptions in connection with the Rasayana Kalpa and is a compilation from three Siddha works, namely, Tirumular Karpam, Bhogar Karpam and Konkanar Karpam.

Therayar Sekarappa, translation of Tamil work into Sanskrit—340 pages.

This is an original unpublished work presented by Dr. C. S. Uthamaroyan. It contains valuable recipes as well as theories on medicines, diseases and food.

Therayar Matrapariksha, translation of Tamil work into Sanskrit—40 pages.

This work deals with the examination of urine according to the methods in Siddha system.

சனவரி, 1973 வரை நடந்த பணிகளைப் பற்றி இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஏடுகளை ஆய்வு செய்து பதிப்பிப்பதே முதற்பணி. அவ் வகையில் சித்த மருத்துவ, ஆயுர்வேத ஆய்வு புத்தக வெளியீடு களைப் பற்றிய குறிப்புக்களை முறையே 4, 5 ஆகிய பக்கங்களில் தந்துள் ளனர். 4-ஆம் பக்கத்தில் Performance என்ற தலைப்பில் மேல்கண்ட புத்தகங்களை கவுன்சில் அச்சுக்கு அனுப்பி அங்கிகாரம் அனுப்பியுள்ளது.

மேற்கண்ட அறிக்கை தரும் குறிப்பில், மூன்று தமிழ் மருத்துவ நூல்கள்—சமசுகிருதத்தில் மொழி பெயர்க்கப்பட்டு கவுன்சிலின் அங்கீ காரம் பெற்று அச்சுக்குப் போய், விரைவில் விற்பனைக்கும் வரப்போகிறது. பிறகு ஆயூர்வேதம் பயின்றவர்கள், இந்த மொழிபெயர்ப்பு நூல்களை எவ்வளவு விரைவில் பரப்ப முடியுமோ, அவ்வளவு விரைவில் பரப்பி விடுவார்கள். சித்த மருத்துவத்தில் உள்ள காயகல்ப முறைகள் ஆயூர்வேதத்தில், மொழி மாற்றம் செய்யப்பட்டு நாடெங்கும் 'ஆயூர் வேதம்' என்ற முத்திரை பெற்று பரவும்.

இனி, மேற்கண்ட நூல்களின் தமிழ் மூல நூல்கள் கதி என்ன வாயிற்று என்று பார்ப்போம்.

சரசுவதிமகால் அறிக்கையின் 5-வது பக்கத்தில், மொழிபெயர்க்கப் பட்ட தமிழ் மூல நூல்களை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

B. *Works Completed aud submitted to the Council for approval*

1. Siddhar Kayakalpam--Tamil–267 pages
2. Therar Sekarappa—Tamil—436 pages.
3. Therar Tharu–Tamil—96 pages
4. Therar Kappiam—Tamil—168 pages
5. Therar Neerkuri Neikuri—Tamil—65 pages
6. Therar Decoctions—Tamil—100 pages

தமிழ் மூல நூல்கள் ஆறும், இப்போது தான் கவுன்சிலின் அங்கீ காரத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதாக மேற்கண்ட அறிக்கையின் குறிப்பு கூறுகிறது. இந்த இரண்டு அறிக்கைக் குறிப்புகளை மறுபடியும் படிக்கும் போது, சித்த மருத்துவம் ஒதுக்கப்படுவது, "வெட்ட வெளிச்ச மாகத் தெரிகிறதல்லவா?"

முதல் அறிக்கைக் குறிப்பின்படி, மூன்று தமிழ் நூல்களின் மொழி பெயர்ப்பினை, கவுன்சில் அங்கீகரித்து வெளியிடவும் தயாராகி விட்டது.

ஆனால் இரண்டாவது குறிப்பின்படி. மூல நூல்கள் இன்னும் அங்கீகாரம் பெருமலேயே கவுன்சிலிடம் பரிசீலனையில் உள்ளது. இரு நிலைகளை சீர் தூக்கிப் பார்க்கும் போது ஒரு கேள்வி எழுகிறது.

"தமிழ் மூல நூல்கள் கவுன்சிலின் அங்கீகாரம் பெருத நிலையில், எந்த அடிப்படையில் அதே நூல்கள

சமஸ்கிருதத்தில்

மொழி பெயர்க்கப்பட்டது மட்டுமின்றி, கவுன்சிலின் அங்கீகாரம் பெற்றது எப்படி?" என்பது நமது கேள்வி.

இனி, மூன்ருவது குறிப்புக்கு வருவோம் :—

C. *Works submitted to the Council for Scrutiny* :

Siddhar Kayakalpam—Hindi translation—
158 pages.

Therayar Sekarappa—Hindi translation—
388 pages.

இரு தமிழ் நூல்கள் இந்தி மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு கவுன்சிலின் விரிவான பரிசீலனையில் உள்ளது. இது மூன்ருவது நிலை!

ஆக, அறிக்கையின் மூன்று பகுதிகளை ஆய்வு செய்த போது நமக்குக் கிடைக்கும் தகவல்கள் :—

1) ஆயூர்வேத மூல நூல்கள் — 3 தான் ஆய்வு செய்யப் பட்டு ஆங்கீகரிக்கப் பட்டுள்ளன.

2) சித்த மருத்துவ மூல நூல்கள் — 9 ஆய்வு செய்யப் பட்டு, இன்னும் கவுன்சிலின் அங்கீகாரம் பெருமலே உள்ளன.

3) ஆனல், சித்த மருத்துவ நூல்கள் மூன்று மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு பதிப்புக்குத் தயாராகி விட்டது. ஒன்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

4) இது மட்டுமின்றி, இரு சித்த மருத்துவ நூல்கள் இந்தியில் மொழி மாற்றப் பெற்று அவையும் விரைவில் வெளி வர இருக்கின்றன.

இந் நான்கு கருத்துக்களையும் ஊன்றிப் படித்தால் வெட்ட வெளிச்சமாகும் கருத்து,

'Literary Research Unit'

'சித்த மருத்துவத்தை ஒதுக்குகிறது' என்பதே ஆகும்.

இனி இன்னொரு குறிப்பினைப் பார்ப்போம். தமிழ் மூல நூல்கள் கவுன்சிலின் உறுப்பினரால் 1970-லேயே அங்கீகரிக்கப் பட்டு விட்டது என்பதை கீழ்க்கண்ட கடிதத்தினைப் படித்தால் தெரியும்.

19-11-70.

From

Dr.C.S.Uthamaroyan, H.P.I.M.,
Director of Indigenous Medicine,
Chepauk, Madras.5.

To

Thiru N.Kandasamy Pillai,
Secretary,
Literary Research Unit,
(Central Council for Research in Indian Medicine and Homoeopathy)
Thanjavur Maharaja Serfoji Saraswathi Mahal Library,
THANJAVUR.

Sir,

Your Ref.F.19-1/70/256-382 dated 12-11-1970
Your Ref.F.21-1/70/387.

After having gone through the following books, viz.:-

1) Siddhar Kayakalpam;
2) Siddha Maruthuva Kalambagam;
3) Theyar Kappiam;
4) Therar Tharu;
5) Therar Decoctions 100
6) Therar Neerkuri - Naikuri.

with commentary are fit to be sent to the press.

The book 'Therar Sekarappa' has been already approved to be sent to the press during the period of the Secretary-ship of Thiru O.A.Narayanasamy, B.A.,B.L., of your predecessor.

Yours sincerely,

C.S.Uthamaroyan, 19-11-70.

டாக்டர் C. S. உத்தமராயன் அவர்கள் கவுன்சிலில் உள்ள 'சித்த மருத்துவ' ஆய்வு உறுப்பினர். அவர் தமிழ் மூல நூல்கள் ஆறினையும் பரிசீலித்து,

"Fit to be sent to the Press"

என்று தனது அங்கீகாரத்தினை 19—11—70 லேயே அனுப்பி விட்டார். ஆனால், அவைகள் அச்சுக்கும் அனுப்பப்பட வில்லை. மாறாக, இன்னும்

"Submitted to the Council for Approval"

என்ற தலைப்பிலேயே வைக்கப் பட்டுள்ளன.

வாசகர்கள், இந்த கடித நகல்களையும், அறிக்கைகளையும் ஆழ்ந்து படித்தால் நாம் தலையங்கத்தின் துவக்கத்தில் கூறிய,

"சித்த மருத்துவம் ஒதுக்கப்படுகிறது"

என்ற முடிவுக்கு நிச்சயமாக வருவார்கள் என்று நம்புகிறோம்.

பொது மக்களின் பணம் கொண்டு நடக்கும் பொது நிறுவனங்களில் இத்தகைய 'பாரபட்சமான போக்கு' மிகவும் கண்டிக்கத் தக்கது. 'Literary Research Unit' — இந்த குறிப்புகள் கிளப்பும் சந்தேகங்கட்கு தக்க காரணத்தினை விரைவில் கூறும் என்று எதிர்பார்க்கிறோம்.

இறுதியாக, ஒரு வேண்டுகோள்! தமிழக அரசு, தமிழைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருப்பது உண்மையானால்,

உடனடியாக இப் பிரச்னையில் தலையிட்டு

உரிய நடவடிக்கை எடுக்க

மூலிகை மணி இதன் மூலம் கேட்டுக் கொள்கிறது.

★

வருந்துகிறோம்!

மின்சாரத் தட்டுப்பாட்டினாலும், அச்சுப் பொறிகள் சரிவர இயங்காததினாலும், இம் மாத இதழ் தாமதமாக வருகிறது. இனி வரும் மாதங்களில் இத்தகு தாமதம் தவிர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாமதத்திற்கு வருந்துகிறோம்; பொறுத்தருள்க!

— ஆசிரியர்.



புளியாரைக் கீரை

(161-வது மூலிகை)

நமது நாட்டில் கோயில்கட்குப் பஞ்சமே இல்லை. ஆமாம்! "தென்னாடுடைய சிவனே போற்றி" என்றார்கள். சிவ மதம் என்பது சைவ மதம். சைவர்கட்கு ஆகாரமாகக் கிடைப்பது கீரை இனம் தானே! எனவே தென்னாட்டவர்கட்கு மூலிகை இனங்களைக் காட்டினார் சிவ பெருமானார். "எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றார்கள் அடியார்கள். இறைவன் எந்த நாட்டிலும், எந்தெந்த மதங்களிலும், பல உருவங்களிலும், பல பெயர்களிலும் இருப்பான். ஆனால் தென்னாடுடைய சிவன் வேறெங்கும் இல்லை! இதன் உட்பொருள் என்ன தெரியுமா? சைவ சமயமும், தமிழ் நாட்டில் கிடைக்கக் கூடிய மூலிகைகள் இளந்தளிர் செடி கொடிகள் (உணவாக உண்ணக் கூடியவைகள்) மற்ற ஐந்து கண்டங்களிலும் காண முடியாது.

இந்த புளியாரைக் கீரையும் சைவ சமயத்தவர்கட்கு ஏற்ற மூலிகை உணவு என்றால் மிகையல்ல! ஏனெனில் குணவாகடமியற்றிய கும்ப முனியே கூறுகிறார் இந்த புளியாரைக் கீரையைப்

பற்றி, "பேருலகில் மானிடர்க்கு நித்தம் அருள்" தினமும் அருள் செய்யுமாம் இந்தக் கீரை! எதை? உடல் வாழ்வதற்கு சக்தி, உயிர் வாழ்வதற்கு சீவன். இதைத் தவிர மனிதர்கட்குத் தேவை என்ன? பட்டமா? பதவியா? வீடு, மாடு, கன்றுகளா? இதை எல்லாம் ஒரு மனிதன் அடைய இறையருள் கூட்டுவிக்க வேண்டுமென்றால், முன்பிறவி யில் செய்த நற்பயன்களின் சக்தியும் கூடினால் தான் கிடைக்கும்.

எனவே, மானிடர்க்கு நித்தமருள் பாலிக்கும் மூலிகைகளில் இந்த புளியாரைக் கீரையைப் பற்றி ஆய்வு செய்வோம்.

புளியாரைக் கீரையை மழை, பனிக் குளிர் காலங்களில் நீரோடை களின் அருகில் ஈரப்பசை மிகுந்த களிப்பு, சதுப்பு நிலங்கள், வாய்க்கால், வரப்புகளில் தன்னிச்சையாகவே நமது தமிழகம் பூராவும் வளர்வதைக் காணலாம். மேலும் கிராம மக்கள் இதனை வயிற்றுப் பிழைப்புக்காகப் பறித்து வந்து நகர் புறங்களில் புளியாரா கீரை ... ... புளியார கீரை ... ..." என்று கூவி விற்பதும் நம் நாட்டு வழக்கங்களில் ஒன்று.

நீர் ஆரைக் கீரையைப் பற்றி வாசகர்கட்கு பத்தாண்டுகட்கு முன்னர் 'தினமணி சுடர்' மூலமாக அறிமுகம் செய்து வைத்தேன். அந்த ஆரைக் கீரையைப் பற்றி, அந்த காலத்து புலவர்கள் ஔவைக்கும்- கம்பருக்கும் நிகழ்ந்த வாக்குவாதம் பற்றியும் குறிப்பிட்டேன். அந்த மாதிரியான வாக்குவாதம் இந்த புளியாரைக்கு இல்லாவிடினும் கும்பமுனி யால் சிறப்பு செய்து பாடப் பெற்றது புளியாரை! நீர்ஆரை — புளியாரை இரண்டிற்கும் பார்வையில் சிறிய வேறுபாடு உண்டு. நீர்ஆரைக்கு நாலு இலை உண்டு. புளியாரைக்கு மூன்று இலைகள் தான் உண்டு. நீர் ஆரை இலை பெரியது; புளியாரைக் கீரை இலை மிகச் சிறியது. நீர் ஆரை நீரில் வளரும். புளியாரை ஈரப்பசையுள்ள சதுப்பு நிலங்களில் வளரும். இரண்டுமே நெய் பசையுள்ள மூலிகைகள். இரண்டுமே தன்னிச்சையாக வளரக் கூடியதே.

பொதுக் குணமும் பயனும்

சக்தி மிகுந்த கீரைகளில் புளியாரைக் கீரை இரண்டாவது இடத் தைப் பிடிக்கிறது. நல்ல புசியைத் தூண்டவும், உடல் சூட்டைத் தணித் துக் குளிர்ச்சியை உண்டு பண்ணவும், உடலை நன்கு கெட்டிப்படுத்தி,

துவர்ப்பிச் செய்கையாக்கி உடலுரமும், பலமும், நோய்த்தடுப்பு சக்தியை ஊக்குவித்து உற்சாகத்தைச் செய்யும் குணமுடையதாகும்.

புளியாரைக் கீரைக்கு புளிப்பு ருசியுள்ளபடியால் உணவாகப் பயன் படுத்தும் போது புளியைக் குறைத்துக் கூட்டி பருப்புடன் நெய் சேர்த்து உபயோகித்து வர, பித்த மிகுதியால் வந்த தொல்லைகள், மூலவாய்வு, கிராணி, உள் மூலம், இரத்த மூலம், வாத நோய்கள், பித்த மயக்கம் ஆகியன நீங்கும்.

தாவர விடம் முறிய

ஊமத்தன் காய் இலைகளைத் தின்றவர்கட்கு உண்டாகும் கெடுதியை நீக்க புளியாரைக் கீரையை இடித்துப் பிழிந்து சாறு எடுத்து 50 மில்லி குடிக்க மேற்படி விடம் முறிந்து விடும்.

கட்டிகள் கரைய

புளியாரைக் கீரையை அரைத்து (சிறிது மஞ்சளும் கூட்டவும்) இரத்தக் கட்டிகள், கடினமான கட்டிகள் ஆகியவைகளுக்கு வைத்துக் கட்டி வர அவை கரைந்து விடும்.

கொப்புளம், முகப்பரு நீங்க

பன்னீர் விட்டு புளியாரைக் கீரையை நன்கு மைபோல் அரைத்து முகப்பரு, கொப்புளங்கள், தீப்பட்டபுண் ஆகியவைகட்கு மேலே போட்டு பூசிவர அவை நீங்கப் பெறும்.

குன்ம நோய்கள் தீர

புளியாரைக் கீரையுடன் மிளகு, சீரகம், சுக்கு சேர்த்து துவையல் செய்து நெய்யுடன் முதல் சோற்றில் 4 பிடி பிசைந்து பகல் உணவில் மட்டும் 1 மண்டலம் சாப்பிட நாட்பட்ட குன்ம நோய்களும் குணமாகும்.

நீங்காத தலைவலிக்கு

வெள்ளை வெங்காயச் சாறு 50 மில்லி, புளியாரைக் கீரைச் சாறு 50 மில்லி கலந்து மெல்லிய துணியில் ஊரவைத்து நெற்றிப்பொட்டில் போட்டு வர நீங்காத தலைவலியும் நீங்கும்.

கண் நோய்கட்கு

இதன் இலையைக் குடிநீர் செய்து கண்களைக் கழுவிவர, தோற்றி பரவும் கண் வியாதிகள் யாவும் நீங்கும்.

மூலம், சீதபேதி, ரத்தபேதிகட்கு

புளியாரைக் கீரையை பசுமையாக எடுத்து இடித்துச் சாறு பிழிந்து 30 மில்லி முதல் 50 மில்லி வரை தினமும் காலை வேளை கொடுத்து வர மேற்கூறிய நோய்கள் யாவும் விலகும் என்பதில் ஐயமில்லை.

நாள்பட்ட மூலம், குன்ம நோய்கட்கு

புளியாரைக் கீரையை அரைத்துப் பசுவின் மோரில் கலந்து காலை வேளை மட்டும் 1 மண்டலம் உட்கொண்டு புளி, காரம் குறைத்துக் கொண்டால் வயிற்றில் உள்ள ரணம், குன்ம நோய்கள், நாள்பட்ட மூல நோய்கள் யாவும் விலகும். புளியாரைக் கீரையும் காயகல்ப விதிகளில் ஒன்றாகும்.

"பித்தமயக்கமறும் பேருலகில் மானிடர்க்கு
சித்தமருள் வாதகபம் நேருமோ — மெத்தனவே
மூலம் கிராணியறும், மூலஉதிரமறுங்
கோலப் புளியாரைக்கு"

— (கும்பமுனி)

★

மூலிகை மணி சந்தா விபரம்

தனி இதழ்	ரூ. 0—50	மூவாண்டு சந்தா	ரூ. 18—00
ஆண்டு சந்தா	6—00	ஆயுள் சந்தா	150—00

மூவாண்டு சந்தா ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு எமது வெளியீடுகளில் ஏதேனுமொன்று இலவசமாகத் தரப்படும். ஆயுள் சந்தா செலுத்தினால் எமது வெளியீடுகள் அனைத்தும் அன்பளிப்பாகத் தரப்படும்.



— முன் மாதத் தொடர்ச்சி

"கள்ளின் மேல் விருப்பம் கொண்டு நடக்கும் ஆட்சியாளர்க்கு எக் காலத்திலும் பகைவர் அஞ்ச மாட்டார். அது மட்டுமின்றி, அவர் புகழையும் இழப்பர்."

— குறள் 921, கள் உண்ணாமை

இறைவனிடம் முறையீடு:

திருப்பெருந்துறையுறை சிவபெருமானே!

வணங்குகின்றேன்.

◎ மதுவால் மதிமயங்கியவர்களைக் காணுமல் இருக்க என் கண்களைக் குருடாக்கி விடு!

◎ மதுவால் உடலும் உள்ளமும் பாழ்படுத்திக்கொண்டவர்கள் கூறும் தகாத சொற்களைக் கேளாமல் இருக்க, என் செவிகளை செவிடாக்கி விடு!

◎ மது அருந்தியவர்களுடன் பேசாமலிருக்க என்னை ஊமையாக்கி விடு!

◎ மதுவின் நாற்றம் என்னை மயக்கமடையாதிருக்க, என் மூக்கினை உணர்வற்றதாக்கி விடு!

அன்று ஞாயிற்றுக்கிழமை! கல்லூரி விடுமுறை ஆதலால், மாணவர்கள் அனைவரும் கூண்டிலிருந்து புறப்பட்ட பறவைகள் போல் சென்னையில், அவரவர்க்குப் பிடித்த பொழுது போக்கு நிலையங்களைத் தேடிச் சென்றனர். ஜே. பி. காலையிலேயே அழகாக அலங்கரித்துக் கொண்டு; ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவன் "வழக்கமாகச் செல்லும் இடத்திற்குச்" சென்று விட்டான். ஜே. பி. உடன் இல்லாததால் காந்தி, கல்லூரிப் பூங்காவிற்குக் காற்று வாங்கச் சென்றுவிட்டார். மாலை நான்கு மணி. மறையும் கதிரவனின் மந்தகாச ஒளியில், பூங்கா அந்தி மயக்கத்தை உண்டுபண்ணியது. காந்தி, பூங்காவில் குறுநடை பயின்று கொண்டார்.

"என்ன மிஸ்டர் காந்தி! தனிமையிலே இனிமை காண்கின்றீர்களா? ஜே. பி. இப்போது கடற்கரையில் இருப்பான். ஆமாம்! உங்களை அழைத்துக் கொண்டு போகவில்லையா!" என்று நாராயணன் கேட்க,

"காலையிலேயே ஜே. பி. என்னிடம் "இரவு தான் திரும்புவேன்" என்று கூறிவிட்டு போய்விட்டார். பொழுது போகவில்லை! காற்று வாங்க இங்கு வந்தேன். நீங்கள் எங்கேயும் போகவில்லையா?" என்று காந்தி கேட்டார்.

"எனக்கு திரைப்படம், நாடகம் பார்க்கும் வழக்கமில்லை. சென்னை நகரில் இருக்கும் திரு. வி. க. பூங்காவிற்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் செல்வதுண்டு; வருகிறீர்களா? உரையாடிக்கொண்டே திரு. வி. க. பூங்கா செல்வோம்" என்று நாராயணன் அழைத்தார். இருவரும் பூங்கா நோக்கிச் சென்றனர்.

"கள்ளுக்கடை திறந்ததால், ஏழைகளின் சொத்துக்கள் பல, அடமானக் கடைகளைத் தஞ்சம் புகுந்திருக்கிறது. சென்னை நகரை மட்டும் எடுத்துக் கொண்டால், 1970-71ல் 1724 அடமானக் கடைகள் தான் இருந்தன. அடுத்த இரண்டு ஆண்டுகளில், அது இரண்டு மடங்கிற்கு மேல் 4362 அடமானக் கடைகளாக மாறி உள்ளன. மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதால், அடமானக் கடைகள் தமிழகமெங்கும் அதிகமாகியுள்ளன என்கிறார்கள். — 'ஆனந்த விகடன்'

"மிஸ்டர் நாராயணன்! ஜே. பி., தன் உறவினர் யாரையாவது பார்க்கச் சென்றிருக்கின்றாரா?"

"இல்லை, மிஸ்டர் காந்தி! ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஜே.பி.-க்கு ஒரு திருநாள். அவனுடைய குடும்ப நண்பர் ஒருவர் இரசாயனத்துறைப் பேராசிரியராக இருக்கின்றார். அவருடைய மகள் இதே கல்லூரியில் 'Philosophy' பாடத்தில் எம்.ஏ. படிக்கின்றார். பெயர் தேவி. இருவரும் காதலர்கள். பெற்றோர்களால் அங்கீகரிக்கப் பட்டுவிட்டதாலும், விரைவில் திருமணம் நடக்க இருப்பதாலும், ஜே.பி. விடுமுறை நாட்களில் தேவி இருக்குமிடம் போய் வருவார். இப்போது ஜே.பி. — தேவியுடன், கடற்கரைக்குச் சென்றிருப்பான்" என்றான் நாராயணன்.

காந்தி, நாராயணனைப் பார்த்து புன்னகைத்தார்.

> ஒருவன் எவ்வளவு புத்திக் குறைவான மனிதனானாலும், சாதாரணமாய் அவனுடைய மூளை சுபாவக் கிரமம் தவறாமல் வேலை செய்யும். ஆனால் ஒருவன் எவ்வளவு புத்திசாலியானாலும் அவனுக்குப் போதையுண்டாகி விட்டால் கீழ் மேல் தெரியாமல் தடுமாறுவான். — இராஜாஜி

4

"தேவி! இன்றைக்கென்ன புரோகிராம்? என்று தேநீர் பருகிய வாறு கேட்டான் ஜே.பி.

"கடற்கரைக்குச் சென்று அலுத்து விட்டது. இன்றைக்கு கபாலி கோவிலுக்குச் சென்று வரலாம்" என்றாள்.

"இன்றைக்கென்ன! தேவிக்கு "பக்தி வெள்ளம்" பெருக்கெடுக்கிறது போலிருக்கிறதே! சரி, சீக்கிரம் 'அலங்காரங்களை' முடித்துக் கொண்டு புறப்படு. எனக்காக 'காந்தி' காத்துக் கொண்டிருப்பார். சீக்கிரம் விடுதிக்கு திரும்ப வேண்டும். இப்போதே நேரம் 5-00 ஆகி விட்டது" என்று விரைவு படுத்தினான் ஜே.பி.

"எனக்கொன்றும் 'பக்தி' திடீரென்று வெள்ளமாகி விடவில்லை. எல்லாம் உங்களுக்காகத் தான்; இன்று கோவிலுக்குப் புறப்படுகிறேன். பிப்ரவரி மாதம் துவங்கி விட்டது. எம்.ஏ., இறுதி ஆண்டு தேர்வு நடக்க இன்னும் இரண்டே மாதங்கள் தாம் உள்ளன. இன்னும் விளையாட்டுப் பிள்ளை மாதிரி ஊர் சுற்றி வருகிறீர்கள். இனி மேலாவது 'விடுதியில்' உட்கார்ந்து ஒழுங்காக படிக்க 'நல்ல புத்தி' கொடுக்குமாறு, 'அம்பாளை' வேண்டிக் கொள்ளவே புறப்படுகிறேன். ஆமாம்! இருக்கின்ற

நண்பர்கள் போதாதென்று, புதிதாக 'காந்தி' என்றொரு நண்பர் வந்து சேர்ந்து விட்டாரா? அவரென்னமோ! ஆகாயத்திலிருந்து குதித்து வந்தவர் போலல்லவா கருகி, "சீக்கிரம் போகவேண்டும்" என்று துடிக்கிறீர்களே! யார் அவர்?" என்று படபடவென்று பொரிந்தாள் தேவி.

"தேவி! உன் வாய்க்கு கல்கண்டு தான் போடவேண்டும். காந்தி ஆகாயத்திலிருந்து குதிச்சவர் தான். அதெல்லாம் ஒரு பெரிய கதை. கோவிலுக்குப் போகும் வழியில் கூறுகிறேன். அது சரி, எனக்கு 'நல்ல புத்தி' கொடுக்கணும் என்று கோவிலுக்கு வருவதாகக் கூறுகிறாயே! நீ மட்டும் என்ன! எல்லா பாடங்களையும் கரைத்துக் குடித்துவிட்டது போலல்லவா பேசுகிறாய்!" என்று சீண்டினான் தேவியை.

"ஆமாம்! நான் எல்லாவற்றையும் படித்து விட்டேன். என் Subject பற்றி உங்களுக் கென்ன தெரியும்?" என்று கேட்டாள் தேவி.

"அப்படியா! எனக்கொன்றும் தெரியாது தான். ஆனால், ஒரு சின்ன கேள்வி கேட்கிறேன்; பதில் சொல் பார்க்கலாம்! 'Comparative Religion' என்ற புத்தகத்தில், டாக்டர். இராதாகிருஷ்ணன் முதல் தலைப்பில் என்ன கூறுகின்றார் சொல் பார்க்கலாம்" என்று மடக்கினான்.

"அதுவா! அது வந்து ... ..." சரி! அதற்கென்ன இப்போ! நான் போய் டிரஸ் செய்துட்டு வரேன் இருங்கோ ..." என்று கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் நழுவப் பார்த்தாள்.

"ஏய்! கழுதை! பதில் சொல்லத் தெரியாமல் சமாளிக்கிறியா?" என்று வேகமாக ஓடி அவளைத் தடுக்க முயன்றான். அதற்குள் அவள் டிரஸ்ஸிங் ரூமுக்குள் சென்று தாள் போட்டுக் கொண்டாள்; தன்னை அலங்கரித்துக் கொள்ள.

மது பானத்தால் மரணம்!

பிரஞ்சு நாட்டிலுள்ள தேசிய சுகாதார மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒரு கணக்கெடுப்பு நடத்தியுள்ளது. ஆடவர்கள் மிகவும் மிதமிஞ்சி குடிப்பதாலும், புகைப்பதாலும், பயங்கரமாக கார்களை ஓட்டுவதாலும் தமது மனைவிமாரை விட எட்டு வருடங்கள் முன்னதாகவே மாண்டு போவதாக அதன் கணக்கு கூறுகிறது. மேலும் மதுபான பழக்கத்தால் ஏற்படும் மரண விகிதம் 1949-ம் ஆண்டுக்குப் பிறகு ஆடவர்கள் மத்தியில் 80 சதவீதமும், பெண்கள் மத்தியில் 32 சதவீதமும் அதிகரித்திருப்பதாகவும் அந்தக் கணக்கு கூறுகிறது. — தினமணி சுடர்

[தொடர்ச்சி 53-ம் பக்கம் பார்க்க

வாசக அன்பர்கட்கு மட்டும்

எமது தயாரிப்புகள் :

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்னானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து, ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலை முடி கொட்டுவதை நிறுத்துவதுடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் ஒரு முறை சாப்பிடலாம். குழந்தை முதல் பெரியோர்கள் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை ரூ. 2—50

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபக மறதி. வழுக்கைத்தலை, அதிஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

முசுமுசுக்கைத் தைலம்

தலைக்குத் தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், அகால ரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காச நோயுடையவர்களுக்கு ஏற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும், பல்லுறுதிக்கும், பல் தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை 0—30 காசு

காது நோய் எண்ணெ

காதில் சீழ் வடிதல், இரத்தம் வருதல், காது வலி, வீக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 2—00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி, கவனமாய்ப் படித்து தேர்வு எழுதி முதன்மையாகத் தேறலாம்.

40-நாள் மருந்து பாக்கெட் விலை ரூ. 3—50

பொன்னுங்கண்ணி தைலம்

அசல் பொன்னுங்கண்ணிக் கீரையால் முறைபடி தயாரித்தது. கண் ஒளிக்கும், பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னானமாகவும், தினம் தடவிக் கொள்ளவும் ஏற்றது. ஒரு புட்டி விலை ரூ. 4—00

புதிய மருந்துகள் விபரம் :

தலைவலிக்கு தைலம்

அடிக்கடி தலைவலி வரும் அன்பர்கள் வாரம் இருமுறை இதனை தேய்த்து ஸ்னானம் செய்துவர படிப்படியாகத் தலைவலி நீங்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

புழுவெட்டு நீங்கத் தைலம்

தலையில் வரும் புழுவெட்டு, பொடுகு, ஆகியன நீங்க இதனை தினமும் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 4—00

பித்தத்திற்குச் சூரணம்

காபி, டீ, புகையிலை மற்றும் பித்தம் தொடர்பான பொருள்களை அதிகமாக பயன்படுத்துவோர், இந்த சூரணப் பொடியைப் பயன்படுத்தி பித்தத்தை நீக்கலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 3—00

ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்

நீரிழிவு நோயுடையவர்கட்கு, அந் நோயைக் கட்டுப்படுத்தவும், காபி, டீ, போன்ற பானங்கட்குப் பதிலாக இதனை காபி போல் பயன்படுத்தி நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 5—00

செம்பரத்தம் பூ தைலம்

இளம் வயதினர்கட்கு முடி செழித்து வளர, தலைக்குத் தடவி வந்தால் இத் தைலம் துணைபுரியும். ஒரு புட்டி விலை ரூ. 4—00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு, இத்துடன் தபால் செலவு ரூ. 2—05 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 3—05 ம், 4 (அ) 5 புட்டிகளுக்கு ரூ. 4—05 ம் தபால் செலவு சேர்த்து அனுப்பவும்.

மணியாடர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் கவனிக்க இயலாது.

முகவரி :— **ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.**
59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)



[வெளிப் பிரயோகங்கள்] — முன் மாதத் தொடர்ச்சி

குட்ட நோய்க்கு

மர எண்ணை ஒரு அவுன்சு, கல்சுண்ணாம்புத் தண்ணீர் 3 அவுன்சு கூட்டி, குட்ட நோய் இரணங்களில் மேல்பூச்சாகத் தடவி வர இரணம் ஆறிவிடும். இதை சொறி, சிரங்குகளுக்கும் பூசி வரலாம்.

ஆசன நமைச்சலுக்கு

இலுப்பைக்கட்டி அல்லது அரப்பொடியை நெருப்பில் போட்டு தினமும் காலை மாலை ஆசனத்தில் காட்டிவர பூச்சிகள் இருப்பினும் அவை ஒழிந்து ஆசன நமைச்சல் விலகிவிடும்.

மூல நோய்

வெங்காரத்தைத் தூள் செய்து வைத்துக் கொண்டு சமன் எடை பசு நெய்யில் கலந்து வைத்துக்கொண்டும் மூலம் வெளித் தள்ளியவர்கள் மேல் பூச்சாக காலை மாலை தடவிவர வெளிமூலம் சுருங்கி உள்ளே போய் விடும்.

மூல எரிச்சல் அடங்க

சிற்றாமணக்கு இலை, வெங்காயம் இவைகளை சமனாக எடுத்து பொடியாக அரிந்து மண் சட்டியிலிட்டு ஆமணக்கு நெய்

விட்டு வதக்கி இரவு காலங்களில் இளம் சூடாக ஒத்தடம் கொடுத்து, அதையே ஆசனத்தில் வைத்துக்கட்ட ஆசனக்கடுப்பு ஆசனக் குடைச்சல், குத்தல், எரிச்சல் யாவும் நீங்கும்.

மூல நோய் (உள்ளுக்கு)—1

பிஞ்சு கடுக்காயைப் பொடித்துச் சட்டியிலிட்டு ஆமணக் கெண்ணெய் கூட்டி வறுத்து தூள்செய்து வைத்துக் கொண்டு பசு நெய் அல்லது வெண்ணெயுடன் இரண்டு மூன்று சிட்டிகை கலந்து காலை மாலை சாப்பிட்டு வர மூலம் வெளித் தள்ளுவது நிற்கும்.

மூல நோய் (உள்ளுக்கு)—2

காட்டுக் கருணைக்கிழங்கு, மருள்கிழங்கு, பிரண்டைவேர், கொடிவேலி வேர் இவைகளில் வகைக்கு 1 ரூபாய் எடை எடுத்து பாலில் பிட்டவியலாக வேகவைத்து உலர்த்தி இடித்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு தினமும் காலை இரண்டு சிட்டிகை வாயிலிட்டு மோர் ஒரு குவளை குடிக்க மூல நோய்கள் யாவும் வேருடன் நீங்கும்.

எல்லா வித மூல வாய்வுகட்கும்

(உள்ளுக்கு)—3

மிளகு 5 கிராம், சீந்தில் கொடி 10 கிராம், சித்ரமூலம் 15 கிராம், காட்டுக்கருணை 20 கிராம், நாட்டுக்கருணை 20 கிராம் இவைகளை பசும் பாலில் பிட்டவியலாக்கி எடுத்து உலர்த்திப் பொடி செய்துக் கொண்டு சம எடை நாட்டு வெல்லமும் நெய்யும் சேர்த்து லேகிய பதமாக கிளறி வைத்துக் கொண்டு காலை மாலை கழற்சிக்காய் அளவு சாப்பிட்டு, பின் காய்ச்சிய பசும்பால் 200 மில்லி குடித்துவர மூல வாய்வு நீங்கி, ஆரம்ப மூலம், உள் மூலம், வெளி மூலம் ஆகிய யாவும் பூரணமாக உடலை விட்டு ஒழிந்து போகும்.

(தொடரும்)

சித்தர்கள் பற்றிய ஆய்வுத் தொடர்க் கட்டுரை:

நம் நாட்டுச் சித்தர்கள்!

[இரா. மாணிக்கவாசகன், எம். ஏ. எம். லிட்.]

'சிவவாக்கியர்'

— சித்திரை மாதத் தொடர்ச்சி

காஞ்சியில் கணிவண்ணன் என்னும் பெயருடைய மன்னன் செங் கோலோச்சி வந்தனன். அவனைக் காணச் சிவவாக்கியர் சென்றார். இவர் சென்ற நேரத்தில், அவன் ஒரு நாட்டிய நங்கையின் கலையழகில் மூழ்கி யிருந்தான். ஆதலின் அவன் அம் மயக்கத்தில் இவரைக் கவனியாது போவென்றான். ஆதலால் அவர் வெகுண்டு அவ்வூர்க் கோவிலில் குடிகொண்ட கோவிந்தனைக் கண்டு மனைவியுடன் மாசுணப்பாய் சுருட்டி வாவென்றான். அவர் பின்னர் திருமாலும், மனைவியும், பின்தொடர்ந் தனர். இறைவனை இழந்த ஆலயத்தை வேதியர் கண்டனர். வேந்த னிடம் சென்று முறையிட்டனர். மாயவனை மீண்டும் கோயில் கொள்ளு மாறு செய்தல் வேண்டும் என இறைஞ்சினர். அரசனும் தன் பிழை உணர்ந்தான். சிவவாக்கியரைத் தேடி மிக விரைந்தான். வேதியர் முதலியோரும் பின்தொடர்ந்து சிவவாக்கியரிடம் பிழை பொறுக்க வேண் டினர். திருமாலைக் கோயில் கொள்ளுமாறு செய்தல் வேண்டுமெனப் பணிந்து வேண்டினர்; இன்றேல் அத்தனை பேரும் இறப்போம் என்று அழுதனர். மன்னனும் அவ்வாறே பலவிதம் அழுதும் தொழுதும் கூறினான். சிவவாக்கியரும் அவர்கள் வேண்டியவாறே பிழை பொறுத்து திருமாலைக் கோயில்கொள்ளுமாறு செய்தார். இதனை ஆசிரியர் கீழ்வரும் பாக்களில் அழகுபடக் கூறுகின்றார்.

"காமருபூம் பொழிற்கச்சிக் கணிவண்ண னுமொருவன்
பூமடந்தை களிகூரப் பொருவருசெங் கோலோச்சு
நேமமுளா னெனக்கேட்டு நிகழ்சிவவாக் கியனென்று
மாமழிசை யாழ்வானம் மன்னனரண் மனைபுக்கான்" (43)

"போவென்ற மொழிவினவிப் பொருவரிய சினங்கொண்டு
கூவென்ற மனைவியுடைக் கோவிந்தன் றனைக்கண்டு
வாவென்ற னுடனுன்றன் மாசுணப்பாய் சுருட்டென்றோர்
பாவென்று முலகுணர்ந்து பகர்தரத்திற் பகர்ந்தானே" (45)

"கணிவண்ணன் வாவென்றான் காமருபூங் கச்சிநகர்
மணிவண்ணா நீபோக வேண்டாமுன் வாய்ந்தவாயிற்
றுணிவுடனே சேர்குதியான் றுணைவருகின் றேனெனமுன்
னெணிவிண்ட பாடலத னேனைபட விசைத்தானே" (52)

கவிஞன் சிறுபாடல் கேட்டு யாவருக்கும் முன் மாயன் போனான். அதன் பின் அருந்தவன் போனான். அவன்பின் அரசன் சென்றான். அருந்தவன் அரசனின் விருந்தாகத் தங்கி, அவனை உய்வித்து அருளுபதேசம் செய்து அங்கு அகன்று பல பதிகள் சென்று விளையாடிருந்தார்.

இவ்வாறு புலவர் புராணம் என்னும் நூல் சிவவாக்கியரைப் பற்றிக் குறிக்கின்றது. இந் நூலின் இறுதியில் வரும் இரண்டு பாக்களும், அடிக் குறிப்பும் இங்குக் குறிக்க வேண்டியன.

"முப்பெயரு மொருவனதா மொழிகுவா ரெதிர்முரணி
யப்பெயராவ் வொன்றினரு மயலெனச்சொல் வாருமுள
ரெப்பெயரு மெவ்வுருவு மேகனதா மெனுமறைகள்
பொய்ப்பெயர்ப்புன் மதக்குறுப்பர் போராட்டம் பொல்லாதே" (57)

"சைவவயி ணவப்பொதுவாஞ் சமயாதீ தப்புலவ
னுய்வடைந்த சரித்திரமீண் டுணர்ந்தளவி லுரைத்திட்டேன்
றெய்வவருட் சித்தர்களிற் றிருமூலனெனும் புலவன்
கைவயினெல் லியங்கனிபோற் கதியடைதல் பகர்வேனே" (58)

முன் பாடலில் முப்பெயர் எனவரும் சொற்கு அடிக்குறிப்புப் பொருள் விளக்கம் ஒன்று காணப்படுகிறது. 'முப்பெயர் — சிவவாக்கியர், திருமழிசையாழ்வார், செந்நாப்புலவர் என்பவை.

சைவர்களால் சிவவாக்கியர் என்றும், வைணவர்களால் திருமழிசை யாழ்வார் என்றும், கல்விமான்களால் செந்நாப்புலவர் என்றும் ஓதுதற் கிலக்கணமாய் விளங்கியவர் ஒருவரே என்பவரிடம் ஒவ்வொரு பெயர்க்கு முரியார் வெவ்வேறென்று வாதிப்பாருமுளார் என்றது பொதுவிற் சரிதத்தை விளக்குவதுடன் சிவன் விட்டுணு பிரம்மா என்னும் பெயர் மூன்றினுக்கு மிலக்காயுள்ளது பொதுப் பொருளான்றே யென்பாரிடம் வெவ்வேறாக மூவருளரென வாதிடும் கண்டபாவனையுடையோர் பலருளாரென்று சிறப்பிற் பொருள் தருவதும், எல்லா நாமரூபங்களும் ஏகமான பரவஸ்துவுக்கே ஆசிரியர்களால் உபசார வகையில் அமைக்கப்பட்டன. அவற்றை ஆன்மாக்கள் பக்குவத்துக்கேற்பப் பற்றி, நின்று காலக்கிரமத்திற் காரியப்

படுவாராயினும் ஆரம்பமான இளம் பருவத்தில் அவர் கொள்ளும் பேத வாதம் மிகக் கொடியதாயிருக்குமென்பதை விளக்கியதும் காண்க. அன்றியும் திருப்புகழ்ச் சுவாமி, முருகதாச சுவாமி, தண்டபாணி சுவாமி என்று மூன்று பெயர்களும் ஒருவருக்கே உரியன வன்று கூறுவோரெதிரில் அன் றன மறுத்து வெவ்வேறுய் மூவரன எதிர்காலத்தில் உரைப்போரு முளராதல் கூடுமெனுங் கருத்தும் குறிப்பால் விளக்கினர்.

இதுவரை கண்ட இக் குறிப்புகள் அத்துணையும் 1840 — 1899 கால வரையறைக்குள் திருநெல்வேலி வேளான்குடியில் தோன்றி வாழ்ந்த முருகதாச சுவாமிகளால் பாடப்பட்ட புலவர் புராணம் என்னும் நூலில் காணப்படுவன. (ஆசிரியர் குறிப்பு :- பக். 360, தமிழ்ப் புலவர் அகராதி ந. சி. கந்தையா பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை-1960)

இக் குறிப்பின் மூலம் திருமழிசையாழ்வார் என்ற பெயரோடு சமய வாழ்வைத் தொடங்கி, சிவவாக்கியர் என்ற பெயரில் தமது ஆன்மீக வாழ்வை அமைத்துக் கொண்ட ஞானி இவர் என்பது புலனுகின்றது. இறுதியாகக் காட்டப்பட்ட அடிக்குறிப்பின் கருத்து நம் முடிவுக்குத் துணை செய்வதே. பெரும் தமிழ்ப் புலவராக விளங்கும் திரு. அழகரடிகள், பாலசுந்தரம் என்னும் இயற்பெயருடையவர். பின்னர் அதனை இளவழகனூர் என மாற்றி இறுதியாக அழகரடிகள் என அமைத்துக்கொண்டார். இம் மூன்று பெயர்களும் அவர் ஒருவரையே குறிக்கும் என்பதும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

இனி இதனோடு சற்று மாறுபட்ட கருத்தைக் கூறும் குருபரம்பராப்ரபாவம் என்னும் நூலின் வாயிலாக அறியப்படுவனவற்றைக் காணுவோம். (பின் பழகிய பெருமாள் ஜீயருளிச் செய்த ஆருயிரப்படி — குருபரம்பராப்ர பாவம், கந்தாடை — திருவேங்கடாசார்யார் பதிப்பு, மெமோரியல் பிரஸ், சென்னை 1892) இந் நூலில் திருமழிசைப் பிரான் வைபவம் என்னும் பகுதியில் காணலாகும் செய்தியினைச் சுருங்கக் கீழ்க் காணலாம்.

(நூலின் நடையிலேயே தந்துள்ளேன்)

"யது குலத்திலே பிறந்து நந்தன் குலமதலையாய் கோகுலத்திலே வளர்ந்தருளினுப் போலே இவ்வாழ்வாருடைய திருவவதாரமும் ஒரு பிறவியிலே இருபிறவையாயிறே யிருப்பது ……… பார்க்கவ மஹரிஷியானவர் திருமழிசையில் தீர்க்கஸத்ரமென்கிற யாகத்தலே ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீமந் நாராயணனை ஸக்ரமமாக பஜித்துக் கொண்டிருக்கிற காலத்திலே பார்க்கவருடைய பத்நி கர்ப்பிணியாய் 'பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்ட' என்கிறபடியே பன்னிரண்டு மாஸத்துக்குப் பின்பு தைமாஸத்தில் மகாநக்ஷத்திரத்தில் பிண்டாகாதியாகப் பிரஸவிக்க ……திருமழிசைப்

பிரான் அவதரித்தாரென்று திவ்யஸூதரி சரிதையிலே சொல்லியுள்ளது. அநந்தரம், உல்பஸூவேஷ்டிதமாய் ஒன்றும் ரூபிகரியாமல் அவதரிக்கையாலே பார்க்கவரும் தத்பத்நியும் அநாதரித்து ஒரு பிரப்பந் தூற்றின் கீழே வைத்துப் போக; அந்த உல்பவர்த பிண்டர்கர்தியானது, அகில ஜகந்மாதாவான பெரியபிராட்டியாரநுக்ரஹத்தாலே, பூமிப்பிராட்டி ஸூரக்ஷிதமாக வைத்துக் கொண்டிருக்கச் செய்தே, 'சிக்கென்று சென்னிக்கால் சீரிடைப்பின் கண்ணுயிராயாக்க வுருப்பாய்ந் தறிவாலுள் நிறைந்து' என்கிறபடியே ஸர்வாவயவங்களும் பரிபூர்ணமாய் அதிலே ஜீவன்ஸ்ப்புரித்துத்தோன்றி, பேதைக்குழவி என்றும் சொல்லுகிறபடியே அத்யந்தம் சிசுவாய் பசுங்குழவியான ஆழ்வார் பசிதாஹங்களாலே யீடுபட்டு ஸ்தந்யார்த்தியாய், விஜநமான வநத்திலே ஒரு பிரப்பன் தூற்றிலே ரோதநம் பண்ண, அவ்வளவிலே மஹீஸார க்ஷேத்ராதிபதியான பெருமான் அங்கே எழுந்தருளி இவர் பசிதாஹம் தீரும்படி குளிரக்கடாக்ஷித்து ஆராவமுதமான ஸ்வவிக்ரஹத்தைக் காட்டி மறைய இவரும் தத்விரஹாஸஹிஷ்ணுவாய் மீளவும் ஆழத் தொடங்கினர்.

அங்கே 'திருவாளன்' என்கிற ஒருத்தன் பிரம்பறுக்கப் போனவிடத்திலே இவருடைய ஆர்த்த நாதங் கேட்டுக் கூடவந்தவர்களுடன் சோதித்து 'இவரைக் கண்டு எடுத்துக் கொண்டு வந்து' தன்னுடைய பத்நியான பங்கயர்ச்செல்வியார் கையில் கொடுக்க அவளும் வந்த்யையாகையாலே, மிகவும் ப்ரீதையாய் பெற்றுக்கொண்டு தத்துக்கொண்டாள் கொலோ, தானே பெற்றாள் கொலோ என்று விகல்பிக்கலாம்படி ஆதரத்துடனே ஸ்நேஹபூர்வமாக வளர்க்க, வளர்ந்தருளுகிற வளவிலே, 'வன முலைகள் சோர்ந்து பாய' என்கிறபடியே முலைப்பால் சுரக்க; இவளும், 'நந்தகோபனணி சிறுவா நான் சுரந்த முலையுணாய்', என்னும்படியே, முலை கொடுக்கத்தேட, இவரும் ஸ்தந்யாதி போஜ்யங்களிலே நிராஹாராய் பகவத் குணகதாரகராய், வாக்வயமஹாரரேசத நாதிகளொன்றுமின்றியே மலமூத்ரரஹிதராய், பரிபூர்ணமாக ஸர்வாவயங்களும் வர்த்திக்க எழுந்தருளியிருக்க இந்த ஆச்சர்யத்தை, அபுத்ரவானுமாய் திருமழிசையிலே வாஸம் பண்ணும் சதுர்த்தவர்ண ஜாதனுமாய், ப்ராஜ்ஞனுமான வெருத்தன் கேட்டு, பாங்காகப் பாலமுது காய்ச்சிக் கொண்டு, ஸ்வபார்யாஸஹிதனாய் இவரிருக்கிற திவ்ய தேஜஸ்ஸைக் கண்டு அத்யாச்சரியப்பட்டு தான் கொண்டு வந்த பாலமுதை ஸமர்ப்பித்து ப்ரார்த்தித்து 'அமுது செய்யப்பண்ண வேணுமென்று இத்தைக் கொண்டு வந்தேன்' அமுது செய்தருளவேணும் என்று வேண்டிக் கொண்டார்.

(தொடரும்)

"சந்திப்போம் — சிந்திப்போம்"

— புதிய கட்டுரைத் தொடர் அடுத்த இதழில் இடம்பெறும்.

— முன் மாதத் தொடர்ச்சி

வங்கார வள்ளைக் கீரை

வேறு பெயர் :— வங்காரவச்சி, **ஆங்கிலம் :** செசுவியம் அட்செர் டன்ஸ். இதர மொழிகளில் இதன் பெயர் தெரியவில்லை.

விபரம்

தமிழ் நாட்டிற்கே உரிய கீரையினங்களில் ஒன்று. மழை காலங்களில் தான் காணமுடியும். நீர்ப்பாங்கான இடங்களில் செழிப்பாக வளரும்.

சுவை : இனிப்பு, துவர்ப்பு, **வீர்யம் :** சீதம், **பிரிவு :** இனிப்பு

குணநிசயம்

சிறுநீர் பெருக்கி, அகட்டு வாய்வகற்றி, மலமிளக்கி, வாதமடக்கி.

கீரைத் தண்டு

வேறு பெயர் :— தண்டுக் கீரை, **ஆங்கிலம் :** அமராந்தஸ் காஞ்சிடிகஸ், **தெலுங்கு :** தோட்டகூரா, **மலையாளம் :** தண்டு கீரா, **கன்னடம் :** ஹர்வை, **சமஸ்கிருதம் :** ஹருதஹா.

விபரம்

தோட்டங்களில் பயிராக்கப்படும் கீரையினம். இதன் தண்டு கனமாக வளருவதால் தண்டுகீரை என்பார்கள். இதில் வெண் கீரைத்தண்டு, செங் கீரைத்தண்டு என இரண்டு இனம் உண்டு. எனினும் மருத்துவ குணம் ஒன்றே.

உபயோக உறுப்பு—தண்டு, கீரை, சமூலம்

சுவை : இனிப்பு, **வீர்யம் :** சீதம், **பிரிவு :** இனிப்பு

குணநிசயம்

குளிர்ச்சியுண்டாக்கி, மலமிளக்கி, குருதிநீர் பெருக்கடக்கி.

கீழாநெல்லி

வேறு பெயர்கள் :— கீழ்க்காய் நெல்லி, கீழாய் நெல்லி, கீழ்வாய் நெல்லி, ஆங்கிலம் : பைலாந்தஸ் நிருரி, தெலுங்கு : நெல உசிரிகா' மலையாளம் : கிழக்காயி நெல்லி, கன்னடம் : நெலநெல்லிகிடா, சமஸ்கிருதம் : பூமியாமலகி, இந்தி : பூயின் அவலஹ.

விபரம்

சிறு பூண்டினத்தைச் சார்ந்த இந்த செடியின் இலை— புளிய இலை போல் அதன் அடியில் சிறு சிறு காய்கள் காய்க்கின்ற படியால் இதற்கு கீழக்காய் என்றும் தமிழ்ப் பெயர் வந்தது. மேலும் நெல்லிக்காயின் குணத்திற்கு ஒப்பானபடியால் கீழக்காய் நெல்லி என்றும் சித்தர்கள் பெயரிட்டுள்ளனர் போலும்! இதில் இன்னொரு இனம் நிலத்திலேயே படரும். இதற்கு செங்கீழா நெல்லி என்பர்.

உபயோக உறுப்பு—சமூலம்

சுவை : துவர்ப்பு, கைப்பு, புளிப்பு, இனிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : மதுரம்

குணநிசயம்

துவர்ப்பி, குளிர்ச்சியுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, வீக்க முருக்கி, நச்சரி, முத்தோடப் பிணிவிலக்கி. (தொடரும்)

மலேசியா & சிங்கப்பூரில்

"மூலிகை மணி"

பூரண வினியோக உரிமை பெற்ற விற்பனையாளர்.

ISMAIL BOOK DEPOT,
G. P. O. Box 149
SINGAPORE.

GETRICH SYNDICATE,
112, Serangoon Road,
SINGAPORE-8.

குறிப்பு :— ஆசிரியர் ஆ. இரா. கண்ணப்பர் எழுதிய மருத்துவ நூல்களும், மருந்துகளும் எங்களிடம் கிடைக்கும்.

ஈளை நோய் பற்றிய விவரக் கட்டுரை :-

ஈளை நோய்க்கு - இடங் கொடேல்!

[புலவர் தே. ப. சின்னசாமி, முத்துகாபட்டி]

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அந்த குறைவற்ற செல்வத்தை பெற வழி காட்டுவதே இந்த வகையில் வருகின்ற ஆய்வுக் கட்டுரைகளின் நோக்கமாகும்.

ஈளை நோய் என்பது என்ன?

வடமொழியில் சயரோகம் என்றும், காசரோகம் என்றும் குறிப்பிடுவதையே தமிழில் ஈளை நோய் என்கிறோம். இதனையே இருமல் நோய் என்றும், எலும்பு உருக்கி என்றும் கூறுவர். ஆங்கிலத்தில் Tuberculosis T. B. என்று குறிப்பிடுகின்றனர். சிலர் Tuperculosis - காசநோய்; Consumotion or Phthisis - சயரோகம் என்று வேறுகக் கொண்டு எழுதியுள்ளனர். இரண்டும் ஒன்றே! Tuberculosis என்பதற்குப் பொருள்தான் Consumption or Phthisis என்பது உடலைத் தின்று கொண்டு போகிற நோய் என்பதே உரிய விளக்கமாகும். காச நோய் என்பது சயரோகத்தைத்தான், சுவாசகாசம் Asthma மூச்சுத் திணறல் எனப்படும், சயரோகம் Consumption ஈளைநோய் எனப்படும். இந்த நோய்க் கொள்ளைநோய் என்கின்றனர். உண்மைதான் அங்கிங்கெனுதபடி எங்கும் - எல்லா நாட்டிலும் பரவியுள்ளது. இருப்பினும் நம்நாட்டில் இதன் ஆட்சி பெரிதாக உள்ளது என்கின்றனர். இது பற்றிய புள்ளி விபர ஆய்வாளர்கள் இந்தியாவில் ஆண்டுதோறும் 5.00.000 பேர் இந்நோயால் இறக்கின்றனர் என்றும்; இந்நோயைக் கட்டுப்படுத்த நம்நாட்டிற்கு 200-கோடி ரூபாய் செலவாகிறது என்றும் கூறியுள்ளனர். இந் நோய் தொற்று நோயாகவும், சமூக நோயாகவும் உள்ளது!

எதனுல் வருகிறது

1882-இல் 'ராபர்ட் காக்' என்பவர் சயரோகக் கிருமிகளைக் கண்டார். Myco-Bacterium Tuberculosis என்ற நுண்ணுயிர்தான் ஈளைநோய்க்குக் காரணமாகின்றது என்று கண்டனர். இந்த நோய்க் கிருமிகள் காற்றினுலும் பரவக்கூடியது. ஆகையால்தான் தொற்றுநோயாகவும், சமூக நோயாகவும் இது ஆட்சி செய்கிறது. வலிவற்ற உடலை எளிதில் இதுதாக்கி ஆட்கொள்ளும். ஓயாத உழைப்பு, சத்தற்றஉணவு சீருணவு (Balanced) இல்லாமை, காற்றேட்டம், வெளிச்சம் இல்லாத வாழ்விடம், தூய்மை இன்மை, ஒழுக்கமற்ற நடத்தை ஆகியவைகளில்

அழுந்தியுள்ளவர்களையெல்லாம் இந்நோய் விட்டு வைப்பதில்லை! ஆட் கொண்டு ஆட்சி செலுத்துகின்றது! அதன் கொடுங்கோலாட்சிக்கு அடி பணிந்தவர்களின் நிலை இரங்கத் தக்கது.

மேற்கண்ட குணமுடையவர்களிடமே இந்நோய் தோன்றும், உடல் இளைத்து குருதி கெட்டு அக் குருதியிலேயே இந்நோய்க்கிருமிகள், Tuberculous Glands சயரோகக்கிரந்திகளாக உருப்பெற்று நுரையீரலில் கண்ணறைகளில் கட்டிகளை உண்டாக்கி சீழ்வரச்செய்யும், அச்சீழே கோழை சளி Sputum ஆக இருமலில் வெளிவரும். இருமலில் குருதி வெளியேறுவதும் Haemoptysis உண்டு.

ஈளை நோயாளியின் கோழை - சளியிலிருந்து காற்று மூலம் பிணி காப்புத்திறன் Immunity இல்லாதவர்களின் நுரையீரலில் இந்நோய்க் கிருமிகள் படியும்; நுரையீரலைத் தாக்கி அழிக்கும்; விலா எலும்பையும் தாக்கும்; குடல், கண், மூளை, விதை, தோல் ஆகிய இடங்களையும் பற்றி அழிக்கும். இந்த ஈளைநோய் உடலில் ஏற்படுத்தும் நோயியல் மாற்றங்கள் Pathological Changes பல!

நோய்க் குறி

பசி இல்லாமை, வியர்வை மிகுதி, உடல் மெலிவு, களைப்பு, குருதி குறைந்து உடல் மெலிதல், இருமல், நகம், மயிர் விரைவில் வளர்தல், கோழை மிகுதி, காரித்துப்பினல் குருதி வருதல் ஆகிய நோய்க்குறிகள் ஈளைநோய் வருவதை முன் அறிவிப்பனவாம். தொடர்ந்து வரும் வயிற்றுப் போக்கும் ஈளை நோய்க்கறிகுறியாகலாம். அடிக்கடி சளி பிடித்தலும் இந் நோய்க்கு அறிகுறியாகும்.

மற்றும் இந்நோய்க்குரிய குறிகளாக இருமல், வாய்நீருறல், வாயினித்தல், உடல் இளைத்தல், மிகுஉணவை விரும்பல், ஆனல் செரியாதிருத்தல், உணவில் கல், மண், மயிர் இருப்பதாக நினைத்து ஆய்தல், இன்பப்பொருளை வெறுத்தல், வாந்தியாதல், கை கால் சூம்பிப் போதல், முன்கால் வீங்குதல், கண் வெளிறல், திடுக்கிடல், மது, மாது புலால்மேல் ஆசையாதல், மிகுந்த வியர்வை வருதல், முகத்தை முக்காடு இடல், நகம், மயிர் விரைந்து வளர்தல், கெட்ட கனவு காணுதல், கை, கால், குளிர்ந்து உடல், நெஞ்சு வெப்பமாதல், அடிக்கடி காய்ச்சல்வருதல் இருமல், இருமி கோழை வெளிவந்ததும் இளைப்பாறுதல், அசதியாதல், விலா, முதுகு வலித்தல், நீர்வேட்கை, மேல்மூச்சு, குருதிவாந்தி, மயக்கம் காது இரைச்சல், நாவில் கருப்பு வட்டம், கற்றுழை நாற்றம், உடல் நடுக்கம் ஆகியவைகளையும் கூறலாம்.

ஈளையின் வகைகள்

ஈளைநோயை நுரையீரலைப் பற்றியது, மற்ற உறுப்புகளைப் பற்றியது என இருவகையாகப் பிரிக்கலாம். இது பற்றிய இடங்களை வைத்துப் பல

வகையாக வகுப்பார்கள். தமிழ் மருத்துவத்தில் இதனை 12 வகையாக வகுத்துக் கூறியுள்ளனர். பிர்ம, சத்திரிய, வைசிய, சூத்திர, வாத பித்த சிலேத்தும, வாத பித்த, வாத சிலேத்தும, பித்த சிலேத்தும, விகார தொந்த ஈளை என்பனவாம்.

ஆங்கில மருத்துவம்

ஆங்கில மருத்துவத்தில் முதற்கண் ஈளை நோய்ஆய்வு Tuberculin Test செய்கின்றனர். எக்ஸ்ரே எடுக்கின்றனர். அதன்பிறகு நோய்க்குத் தக்கவாறு மருத்துவம் செய்கின்றனர். சத்துணவு, நல்லஓய்வு, தொடர் மருந்து, காற்றோட்டமான எழில் மிக்க சூழ்நிலை ஆகியவற்றின் மூலம் நோயைக் குணமாக்குகின்றனர். தொடக்கநிலையில் குணமாகி விடுகின்றது. ஈளைநோய் நல நிலையங்கள் T B. Sanatorium அப்பணியைச் செய்கின்றது! 1944-இல் இதற்கு ஊசி மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதுதான் Streptomycin அதன்பின் 1946-இல் P. A. S. 1951-இல் I. N. A. H. என்ற மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டது. P.A.S—Para amino Solicylic acid I. N A. H — Iso - Nicotinic Acid Hydrabidae) இந்த மருந்துகளால் நோய் குணமாகின்றது! வாரக்கணக்கில், மாதக் கணக்கில், வருடக்கணக்கில், ஏன் இறக்கும் வரையுங்கூடத்தான் இம் மருந்துகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது! ஆயிரக் கணக்கில் செலவாகும்! பணக்காரர்கள் செலவு செய்து மருந்தால் அடித்த பிண்டங்களாக இருக்க முடியும்! ஆனால் ஏழைகளால் இது முடியுமா? ஈளைநோய் வந்தால் அதற்கு இரையாக வேண்டியதுதான் (ஆங்கில மருத்துவத்திற்குச் செலவு செய்ய இயலாமல்)

மற்றும் இந்த மருந்துகளைத் தொடர்ந்து கொடுப்பதால் வேறுபல தீங்குகளும் ஏற்படுவதைக் காண்கின்றோம். காது கேளாமை, சிறுநீர் கெடுதல், அதனால் உடலில்நீர் கோர்த்தல், உடல் ஊதினாலும், ஆற்ற லிழத்தல் ஆகிய தீமைகள் ஏற்படுகின்றன. வேறு வழியுண்டா? உண்டு.

தமிழ் மருத்துவம்

ஈளைநோய்க்குச் சித்த மருத்துவத்தில் சில நல்ல, நிரந்தர குண மளிக்கும் மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. அதற்குரிய மருந்துகள் தாளக பற்பம், தாளக பதங்கம், சயகுலாந்தகன், தூதுவிளைக்கிருதம், ஆடாதோடைக்கிருதம், கண்டங்கத்திரிகிருதம் என்பனவாம். இம்மருந்து கள் உடலைக்கெடுக்காமல் உடல் ஓம்பி ஈளையை அழிக்கும்.

ஈளைக்கிடங் கொடேல்

ஈளைநோய்க்கு இடங்கொடுத்து மருத்துவம் நாடுவதைக் காட்டிலும் இடங்கொடுக்காமல் நலமுடன் வாழ்வதே அறிவுடைமை! வந்தபின் வருந்துவதினும் வருமுன் காப்பதே சிறப்பு. அதற்குரிய வழிகள் கூறு வதே கட்டுரையின் தலையான நோக்கமாகும்.

ஆங்கில மருத்துவத்தில் தடுப்பூசி போடுகின்றனர், அதுதான் B. C. G. வலிவற்ற காசநோய் நுண்ணுயிர்களை உடலின் குருதியில் செலுத்துகின்றனர். இதனை அழிப்பதற்காக குருதியில் 'எதிர் உயிர்ப் பொருள்' தோன்றுகின்றது. (Anti bodies) அந்த 'எதிர் உயிர்ப்பொருள்' Anti - bodies உடலில் மீண்டும் ஈளைநோய்க் கிருமிகளை அண்டவிடாது. எனவே B. C. G செயற்கை பிணிகாப்புதிறன் Immunity உண்டாக்கும் மருந்தாகும். B. C. G. தடுப்பு மருந்திற்கு உலக முழுமையும் எதிர்ப்பு தோன்றியதை யாவரும் அறிவர். அதுபல தீங்கிழைக்கும். எனவே இயற்கையான பிணிகாப்புதிறன் Natural Immunity உள்ள வழிகளை அறிவோம். சத்துள்ள உணவு—சீருணவு (Balanced), காற்றோட்டம், வெளிச்சமுள்ள வாழ்விடம், தூய்மை, உழைப்பு, (அளவான உழைப்பு) அல்லது உடற்பயிற்சி, ஒழுக்கமான நடத்தை ஆகியவைகளே இயற்கை யான பிணிகாப்புதிறன் கூட்டும் வழிகளாகும். இதனை மேற்கொண்டால் எல்லோரும், என்றும், ஈளைநோய்க்கிடங் கொடுக்காமல் நோயற்ற வாழ் வில் குறைவற்ற செல்வத்தைப் பெற்றுய்யலாம் !

மற்றும் ஈளைநோய் தொற்றுநோய் என்பதை யாவரும் அறிய வேண்டும். ஆகவே நோயாளிகளைத் தனியிடத்தில் வைப்பது நல்லது, நோயாளிகளிடம் சிறுகுழந்தைகளையும்,வயதானவர்களையும், வலிவற்றவர் களையும் அண்டவிடக்கூடாது. அவர்களது ஆடை முதலானவற்றைப் பிறர் அணியக்கூடாது. அவர்களது இருமி வெளியாக்கிய கோழை,சளி, எச்சில் ஆகியவைகளைப்பிறர் தொடுவதோ, மிதிப்பதோகூடாது. ஆடு, மாடு முதலானவைகளையும் ஈளைநோய் பற்றியிருக்கும். அத்தகையவற்றின் பால், புலால் ஆகியவைகளை உண்ணக்கூடாது. நோயாளியின் மலம் சிறுநீர்களை மிதிக்கக்கூடாது.

உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்திகளைக் குறைக்கும் டீ, காப்பி, மது முதலானவற்றைத் தவிர்க்கவேண்டும். புகையே, முதற்காரணமும் முக்கியக் காரணமும் ஆகும். எனவே அதனை அறவே தவிர்க்கவேண்டும் மிகு புணர்ச்சி ஈளைக்கிடமளிக்கும் எதிலும் அளவான போக்கு வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டும் !

உயிர்ச்சத்துக்கள் Vitamins, கனிமங்கள் Minerals நிறைந்துள்ள பல்வகைப் பழங்கள், கீரைகள் அடிக்கடிஉணவில் சேர்த்துக் கொள்கின்ற வர்களை இந்த ஈளைநோய் அணுகமுடியாது !

ஆளைக்கொல்லும் ஈளைநோய்க்கிடங் கொடுக்காமல் வாழ்வதே

ஆற்றலுடைமையும் அறிவுடைமையுமாகும் !

அநுபவம் உணர்த்தும் உண்மை

மு. பெரியசாமி,
சிற்றெழுத்தர்.

11—6—73
மேலத்தெரு, அல்லூர் அஞ்சலகம்
முத்தரசநல்லூர் துணை அஞ்சலகம்
கரூர் வழி, திருச்சி மாவட்டம்.

மருத்துவக் கலையினை மாண்புறவே வளர்க்கின்ற மருத்துவ மாமணியே! மூலிகை மன்னரே!! கழிந்த பரிதாபி ஆண்டு ஐப்பசி மூலிகை மணியில்; "சிடுகா மருந்தே சிறந்த மருந்து" என்ற தலைப்பின் கீழ் சொறி, சிரங்குகளுக்கு முதிர்ந்த 'பூவரச மர உள் பட்டையினை' வெட்டி வந்து நிழலில் பாங்காக உலர்த்தி; இடித்துத் தூள் செய்து சூரணமாக்கிக் கொண்டு மேற்படி சூரணம் ஐம்பது கிராமுடன் தெங்கெண்ணெய் அரை லிட்டர் கலந்து 1 வாரம் சூரிய புடமிட்டு; புடமிட்ட எண்ணெயை மேற்பூச்சுக்கு பூசி வந்ததில் பயனை 2 வாரத்தில் பரிபூரணமாகக் கண்டேன்.

தங்களின் மருத்துவத் தொண்டிற்கு
திங்களும் ஈடாகா தீந்தமிழே!
உங்களை வாயார வாழ்த்தி
உளமது மகிழ்கிறேன் ஈண்டு.

கா. அழகர்சாமி ஆசாரி,

6—6—73
காமாக்ஷி நிலயம்,
T. வாடிப்பட்டி போஸ்ட்.
மதுரை ஜில்லா.

உயர்திரு ஆசிரியர் அவர்களுக்கு,

தாங்கள் அனுப்பிய "நேத்திரப் பூண்டு தைலம்" ரொம்பவும் பிரமாதம். எனக்கு ஒரு கண் சுத்தமாக பார்வை இல்லாமல் இருந்தது. இப்போது முக்கால் பார்வை வந்து விட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வ. சின்னப்ப பிள்ளை, 13—6—73

சுப்பிரமணியர் கோயில் தெரு,
அய்யனுபுரம்.
சத்திரப்பட்டி போஸ்டு,
(via) இராஜபாளையம், இராமநாதபுரம் Dt.

உயர்திரு மூலிகை மணி A. R. கண்ணப்பர் அவர்களுக்கு, அய்யனுபுத்திலிருக்கும் வ. சின்னப்பிள்ளை எழுதிய லட்டர் என்ன வென்றால் நான் சில வருஷங்களுக்கு முன் உங்களிடம் நான் நேரில் வந்து என் சீக்கை பார்த்தீர்கள். பார்த்து மருந்து கொடுத்தீர்கள். மருந்து சாப்பிட்ட பின் பூ ர் ண குணம் ஆகி விட்டது. உங்கள் நன்றியை என்றும் நான் மறக்க மாட்டேன்.

அ. பன்னீர்செல்வன், 20—6—73

செங்கம்.
வட ஆற்காடு மாவட்டம்.

பேரன்புடைய ஐயா அவர்கட்கு,

நான் செங்கம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். நான் தங்களின் பதிப்பாகிய "மூலிகை மணியின்" வாசகன். தவருது மூலிகை மணியில் வரும் செய்திகளையும், மருத்துவக் குறிப்புகளையும் குறித்து வைக்கும் பழக்கமுடையவன்.

தங்களின் "மூலிகை மணியில்" பிரசுரமான

'இலந்தை இலை'

வைத்தியத்தைப் பல பெண்களுக்குச் சொன்னதில் முறையோடு பின் பற்றியவர்களுக்கு (இரண்டு ஆசிரியர்களின் மனைவிக்கு) குழந்தை பிறந்துள்ள மகிழ்வுச் செய்தியைத் தங்கட்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உ
முருகா.

நோய்களின் பெயர் அகராதி!

— முன் மாதத் தொடர்ச்சி

ஆங்கிலம் :		தமிழ் :
Chordee (கோர்டி)	—	நீர்தாரை நரம்பில் காணும் நோய்
Chorea (கொரியா)	—	வெறி
Chyluria (கைலூரியா)	—	பாலைப் போல் இருக்கிற மூத்திரம்
Choroiditis (கொராய்டிடீஸ்)	—	விழியின் நடுவில் காணும் அழற்சி
Cirhosis of the lungs (சிர்ஹாசிஸ் ஆவ் தி லங்ஸ்	—	நுரையீரலின் மேல் சவ்வில் காணுகிற அழற்சி
Cleft palate (க்ளப்ட் பாலேட்)	—	மேல்வாயின் வெடிப்பு
Club foot (க்ளப்புட்)	—	நொண்டிக் கால்
Coceyodynia(கோகியோடைனியா)	–	சினைப்பையில் காணும் வேதனை
Colic (காலிக்)	—	வயிற்று வலி
Collaps (கொலாப்ஸ்)	—	பயங்கரத்தினால் தேகம் சுருங்கிப் போகுதல்
Colloid cancer (காலாய்ட்கான்சர்)	—	வயிற்றில் காணும் விப்புருதி
Colour blindness (கலர் ப்ளைன்ட்நஸ்)	—	பார்வையின்மை
Coma (காமா)	—	போத க்ஷயம்
Compression of Brain (கம்ப்ரஷன் ஆவ் ப்ரெயின்)	—	மூளை சுருங்குதல்

Concussion (கன்கஷன்) — பயங்கரத்திஞல் தேகம் குவிந்துப் போகுதல்

Condylomata (காண்டிலோமேடா)— ஆசனத்தில் காணுகிற மருள்

Congestion (கஞ்சஷன்) — இரத்தம் கட்டிக்கொள்ளுதல்

Conjunctivitis (கஞ்சங்டிவிடீஸ்) — கண் சவ்வு

Contipation (கான்ஸ்டிபேஷன்) — மலபந்தம்

Convulsion (கன்வல்ஷன்) — வலிப்பு

Cornea (கார்னியா) — சுக்கில மண்டல அழற்சி

Corns and callosities (கார்ன்ஸ் அண்ட் கல்லோசிடீஸ்) — உணி

Coryza (கொரைஜா) — நீர்ப் பீநிசம்

Cough (காப்) — இருமல்

Cramp (க்ராம்ப்) — வலி ; இழிப்பு

Croup (க்ரௌப்) — ஈழை ; மாந்தம்

Cyanosis (ஸியாநோஸிஸ்) — பாஷாணத்திஞல் தேகம்கெட்டு முழுதும் நீல வர்ணமாய்விடுதல்

Cycosis (சைகோஸிஸ்) — முகத்தில்காணுகிற ஓர்வித படை

Cynanche Porotidea (சைநாங்க் பாரோடைடியா) — செவி அழற்சி

Cynanche Trachealis (சைநாங்க் ட்ராகியாலிஸ்) — ஈழை ; கப நோய்

Cystitis (சிஸ்டைடீஸ்) — மூத்திரப்பை வீக்கம்

Dandriff (டான்ட்ரீப்) — சுண்டு ; சுடுகு

(தொடரும்)

உடல்நலக் குறிப்புகளடங்கிய கட்டுரை :—

நீடுழி வாழ வழி!

[திரு. வி. பலராமய்யா, அரும்பாக்கம், சென்னை-30]

— முன் மாதத் தொடர்ச்சி

பற்களில் சொத்தை, சீழ், ரத்தம் இவைகளைக் கண்டால் உடனே தக்க மருத்துவர்களிடம் காட்டிப் பற்களைச் சீர் செய்து கொள்ள வேண்டும். மேற் சொன்ன பற்பொடியை உபயோகிப்பது நலம். மறுபடியும் சொல்லுகிறேன். பல்லைத்தேய்த்துக் கொண்டேயிருக்காதீர்கள். ஈறுகளைத் தேயுங்கள். உயிருள்ள வரையில் பல் உறுதியாயிருக்கும்.

நாக்கைத் தூய்மை செய்தல்

பற்களைத் துலக்கும்போது நாக்கையும் சுத்தி செய்தல் அவசியம். நாக்கில் அழுக்குப் படிந்தால் உணவின் சுவையை உணர முடியாது. சுவையுடன் உண்ணுவிட்டால் அமிர்த மன்னும் உமிழ் நீருைல்தான் நம் உணவு முக்கால் பங்கு சீரணம் ஆகிறது. நாக்கை சுத்தம் செய்யும் கருவியை (Tongue Cleaner) ஏழைகளும் வாங்கி உபயோகிக்கலாம்.

காலையில் உலாவுதல்

அதிகாலையில் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே சென்று 4, 5 மைல்களாவது உலவி வருதல் அவசியம். இப் பயிற்சி உடலுக்கு எல்லா பயிற்சிகளைக் காட்டிலும் உயர்ந்தது. காலை காபி சாப்பிடும் பழக்கம் உள்ளவர்கள் காபியை அருந்திவிட்டுக் கூட உலாவப் போகலாம். சூரியன் உதயமான பிறகும் போகலாம். ஆனால் சூரிய உதயத்திற்கு முன்னரே உலாவுதல் நல்லது. அதிகாலையில்தான் பிராண வாயு சுத்தமாக பூமியில் பரவுகிறது. நாமும் அக் காலத்தில் வேண்டிய அளவு பிராணவாயுவை உட்கொள்ள முடியும்.

இந்தப் பயிற்சியினுல் உடலை நீட்டி உயிரை நீட்டலாமென்று பல மேதாவிகள் சொல்லியுள்ளனர். 101 வயது வரையில் ஆரோக்கியத்துடன் சில வருடங்களுக்கு முன் வரை நம்முடன் வாழ்ந்திருந்த மேதாவி என்சினீயரான திரு. விச்வேச்வரய்யா சொன்ன அரிய கருத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

"Your health lies 10 miles away
you have to daily walk & pick it up there"

அதாவது உன்னுடைய உடல் ஆரோக்கியம் 10 மைலுக்கப்பா லுள்ளது. பிரதி தினம் நீ நடந்து போய் அவ்விடத்தில் அந்த ஆரோக்கி யத்தைப் பெற்றுக் கொள்ளென்பதாம்.

என்னுடன் பிரதி தினம் காலையில் உலவிவரும் நண்பர் திரு. ரங்கா ரெட்டி என்பவர் வயது 87, அவர் ஊர் ஐதராபாத் உயர்ந்த அரசாங்கப் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றவர். செல்வச் சீமான். அவரே தன் காரை ஓட்டிக் கொண்டு இரண்டு மைலுக்கப்பாலுள்ள என் வீட்டிற்கு வந்து என்னை கடற்கரைக்குக் காலை 5 மணிக்கு அழைத்துப் போவார். அவர் என்னுடன் 3. 4 மைல்கள் வெகுவேகமாய் நடப்பார். இப்பெரியவருக்குப் பற்கள் விழவில்லை. கண்கள் சீரிய முறையிலுள்ளன. 2 மைல்கள் தூரம் சத்தம் கேட்குமளவுக்கு ஓசை எழுப்ப வல்லவர். இவர் அடிக்கடி தன் நண்பர்களுக்கு இந்தக்காலை உலாவுதலைப் பற்றியே சொல்வார். அவருடைய நீடிய ஆயுளுக்கும் ஆரோக்கியத்திற்கும் தன் காலை உலாதான் காரணமென வலியுறுத்துவார்.

ஓடும் பழக்கம்

கடற்கரையில் சிலர் ஓடுவதை நான் பார்த்ததுண்டு. உடற்பயிற்சி யில் ஓடுதல் சிறந்ததென அவர்கள் கருத்தாயிருக்க வேண்டுமென நினைக் கிறேன். ஆரோக்கிய விதிப்படி ஓடுவது நல்லதல்ல. ஓடுவதால் மூச்சு அதிகமாய்ப் போகும். பிராணவாயு வீணாகிவிடும். மனிதனுடைய ஆயுள் அவன் விடும் சுவாசங்கள் எண்ணிக்கையைப் பொறுத்துள்ளது. சாதாரணமாய் மனிதனுக்கு ஒரு நிமிடத்திற்கு 15 சுவாசங்கள் உள்ளும் புறமும் இயங்குகின்றன வென்றும். அக்கணக்கின் படி ஒரு நாளைக்கு (15 × 60 × 24) 21600 சுவாசங்கள் இயங்குகின்றன வென்றும். இதில் வெளியில் விடும் சுவாசம் 12 அங்குலங்கள் பாய்கிறதென்றும் உள்ளே செல்லும் சுவாசங்கள் 8 அங்குலங்க ளென்றும், இவ்விதம் இயங்கு வதினால் 4 சுவாசங்கள் வீணாகி விடுகிறதெனவும் அதனால், ஆயுள் குறைய நேரிடுகிறதென ஞானிகள் சொல்கின்றனர். மற்றும் சாப்பிடும் போது 18 அங்குலங்களும், ஓடும்போது 42 அங்குலங்களும். பெண் சங்கமம் செய்யும் போது 50 அங்குலங்களும் சுவாசம் வெளியேறிவிடுகிற தென்றும் தத்துவ ஞானிகள் சொல்கின்றனர்.

ஆகவே ஓடும் பயிற்சி நன்மை பயக்கக்கூடியதா இல்லையா வென்பதை வாசகர்களே முடிவு கூறவேண்டும்.

குளிப்பது

உடற்பயிற்சி முடிந்த உடனே குளிக்கப்படாது. பயிற்சியின் காரணத்தினால் உடல் வெப்பமடைந்திருக்கும். அச்சமயம் அந்த வெப்பத்

திர்கு மிகையான வெந்நீரோ அல்லது வெப்பத்தை திடீரென குளிர்விக்கும் தண்ணீரோ உடலின்மேல் ஊற்றப்படாது. உடல் வெப்பத்தின் அளவுக்கே நீரின் வெப்பமும் இருக்கவேண்டும். இயற்கையை அனுசரித்து நாம் நடப்பதே நன்று. இயற்கையுடன் போராட்டம் செய்தால் மரணம் விரைவில் கிடைக்கும்.

சிலர் குளிப்பு அறையிலேயே காலையின் முக்கிய நேரத்தைக் கழிப்பர். உடலை சோப்பினால் பன்முறைகள் தேய்த்து அலம்புவர். இப்படிச் செய்வது புண்ணியமா, புருஷார்த்தமா? குளித்து முடிந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உடல் அழுக்கடைவதுடன் துர்நாற்றமும் வீச ஆரம்பித்துவிடும். ஆகவே வீணாக் குளிப்பு அறையில் காலத்தைக் கடத்துதல் சோம்பேறிகளின் வேலையாம். ஓரளவுக்கு உடலைத் தேய்த்துக் குளிக்கவேண்டியதுதான். ஆனால் அளவுக்கு மீறிய நீரை உடலின்மேல் ஊற்றினால் உடலின் ரோம துவாரங்கள் வழியே அதிகநீரை உடல் எடுக்க நேர்ந்து அதனால் பலவிதமான பிணிகள் உண்டாகும். முக்கியமாகக் கப வியாதியுடையவர்கள் வெகு விரைவில் குளிக்கும் கிரியையை முடித்தல் அவசியம். உடலைத்தேய்த்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் உள்ளத்தைத் தேய்ப்பதே அறிவுடையோர்கள் செய்யும் கிரியை.

சோப்பு உபயோகிப்பதினால் குற்றமில்லை. ஆயினும், கண்களினுள் சோப்பு தாக்காதபடிப் பார்த்துக்கொள்வது முக்கியம். சோப்பிலிருக்கும் சுண்ணும்பு சத்து கண்களின் மிருதுவான நரம்புகளைத் தாக்கிப் பழுது படுத்தும். குறிப்பாகக் குழந்தைகளுக்கு முகத்தில் சோப் உபயோகிக்கக் கூடாது.

தலைக்குத் தண்ணீர்

தலையில் பிரதி தினம் தண்ணீர் ஊற்றும் பழக்கம் நல்லதன்று. தலையில் ஊற்றும் நீர் உச்சியின் மூலம் உடல் எடுத்துக் கொள்கிறது. அதனால் மூக்கில் பீனசம், சளி, இருமல், காதடைப்பு, தொண்டைகம்மல் முதலான வியாதிகள் உண்டாகும். குறிப்பாக ஆஸ்துமா, சுரம், சளி முதலிய வியாதியுள்ளவர்கள் தலையில் அடிக்கடி தண்ணீர் ஊற்றப்படாது.

தலைக்கு எண்ணெய்

நம் நாட்டு வெப்ப தட்ப நிலைமைக்கு நல்லெண்ணெய் தேய்த்து வாரத்திற்கொருமுறையாவது தலை குளிப்பது அவசியம். இதனால் உடல் வெப்பம் குறைந்து சம நிலையுண்டாகும். தெரியாமலா அந்த எண்ணெய்க்கு நல்லெண்ணெயென்று பெரியோர்கள் பெயர் சூட்டினர். பித்த வியாதியுடையவர்கள் நல்லெண்ணெயிற் கொஞ்சம் சீரகம் போட்டு

சீரகம் கறுப்பு நிறமாகும் வரையில் காய்ச்சி தலைக்குளி செய்வது நலம். தலைக் குளியலுக்கு வென்னீர்தான் உபயோகிக்க வேண்டும். கபவியாதி யுடையவர்கள் துளசியை அரைத்து வடைபோல் செய்து நல்லெண்ணெயி லிட்டுக் காய்ச்சி தலைக்கு தேய்த்துக் குளிப்பது நலம் பயக்கும்.

"வீறுடைத்தூர் நாட்கொருகா நெய் முழுக்குந் தவிரோம்
விழிகளுக்கஞ் சனமூன்று நாட்கொரு காலிடுவோம்
....
நமனுர்க்கிங் கேதுநவை நாமிருக்குமிடத்தே."

என்றுர் தேரையர்.

நான்கு நாட்களுக் கொருமுறை எண்ணெய் குளி எவ்வளவு முக்கியமன்பதை நமக்குத் தேரையர் சொல்லியுள்ளதைக் கவனிக்கவும். சாதாரணமாய் எண்ணெயில் மிளகு கொஞ்சம் தட்டிப்போட்டு அளவுடன் காய்ச்சி தலையில் தேய்த்து ஒரு மணி நேரம் ஊறியபின் தலைகுளி செய்யவும். தலைகுளி செய்து கொண்டு மிளகு ரசம் கூட்டி சாதம் சாப்பிடுதல் நன்று. இவ்வித சாதனையால் உடலிலுள்ள பலவித விஷ நீர்கள் வெளியேறிவிடும். தலை குளியன்று மோர், தயிர் உபயோகிக்கக் கூடாது. பெண் சங்கமம் அன்று தவிர்த்தல் வேண்டும். நமக்குத் தெரியாமலே அன்றுதான் காமவிகாரம் அதிகமாய் ஏற்படக்கூடும். உடல் வெப்பத்தை சமனப்படுத்தக் கூடிய எண்ணெய் குளி சாதனத்தை நாம் கையாண்டும் பலனில்லாமற் போய்விடும். ஏனெனில் எண்ணெய்க் குளியன்று நரம்புகள் தளர்ந்து இருக்கும். எண்ணெய் குளியினுல் தணிந்த வெப்பம் பெண் சங்கமத்தினுல் அதிகமாகி நரம்பு தளர்ச்சியை விரைவில் உண்டாக்கும். மேலும், விந்து அதிகமாயும் சீக்கிரமாகவும் அன்று வெளிப்படும்.

பெண்கள் ஆண்களைக் காட்டிலும் பதின்மடங்கு அதிக காமத்தை யுடையவர்களென்று சொல்லப்படுகிறது.

10 முறைகள் மைதுனம் செய்தால் ஒன்றிரண்டு முறைகளே பெண் திருப்தியடைகிறளென்றும், பெண்கள் தலைக்குளியன்று சங்கமம் செய்வதால் அவர்களுக்கு விரைவில் இன்பம் அளிக்க ஆணால் முடியுமென்றும் காமநூல் மூலம் அறிகிறோம். அதன்படி அறிந்து நடந்துகொள்க.

பெண்கள் தலைக்குளி

பெண்களும் ஆண்களைப் போல் 4 நாட்களுக் கொருமுறை எண்ணெய் குளி செய்வது நன்றென மருத்துவ நூல்கள் சொல்கின்றன.

அவர்கள் முக்கியமாக பிரதிதினமும் குளிக்கும்போது மஞ்சளை வேண்டிய அளவு முகம் உடலெல்லாம் தடவி குளிப்பது சாலச்சிறந்தது. இதனால் சருமம் வழுவழுப்பும் மேனி பளபளப்பும் பெறும். உடலிலுள்ள துர்நாற்றமும் அகலும். சரும ரோகங்கள் பீடிக்காது. அது மாத்திரமா! ஆண்களை வசியப்படுத்தக் கூடிய பொருளென மஞ்சளைப்பற்றிச் சொல்லப்படுகிறது

கீழ்க்கண்ட செய்யுள் கவனிக்கற்பாலது :—

"பொன்னிறமாம் மேனி புலால்நாற்றமும் போகும்
மன்னு புருஷவசியமாம் — பின்னியெழும்
வாந்திபித்த தோஷமையம் வாதம்போம் தீபனமாம்
கூர்ந்தகறி மஞ்சள் தனக்கு"

இந்த செய்யுள் நான் இயற்றியதல்ல. தேரையரென்னும் ஞான சித்தரால் கூறப்பட்டது. பெண்கள் இதை நோக்குக. சிறு வயதிலிருந்தே பெண்களுக்கு இந்த மஞ்சள்பூசும் பழக்கத்தையும் அதன் நன்மையையும் வீட்டுப் பெரியோர்கள் விளக்கிக் கூறுவது நல்லது. "அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பன்" என்பது வேடிக்கை பேச்சு ஆனால் உண்மையில் சில பெண்கள் சித்தப்பா போலவே காட்சியளிக்கிறார்கள். காரணம்; மஞ்சள் உபயோகமில்லாததால். பெண்களுக்கு மீசை முளைத்தால் ஆண்கள் அவர்களை எப்படி விரும்புவார்கள் ?

(தொடரும்)

ஞாபக சக்திக்கு வல்லாரைத் திப்பிலி

இளம் மாணவ மாணவியர்களுக்கு இரவில் படிப்பது பகலில் மனதில் தங்குவதில்லை என்று கவலைப்படுவோர்களின் குறை நீங்க ஆசிரியர் கண்ணப்பர் அவர்களால் தயாரிக்கப்பட்ட 'வல்லாரைத் திப்பிலியை' வாங்கி முறையே 40 வேளை சாப்பிட ஞாபக சக்தி வளர்வதுடன், அறிவு விருத்தியும், சுறுசுறுப்பும் ஏற்படும். ஞானசாதன மூலிகையான வல்லாரைச் சாற்றில் தயாரிக்கப்படும் 'வல்லாரைத் திப்பிலி' வேண்டுவோர் ரூ. 5-50 மணியாடர் அனுப்பி பதிவு பார்சலில் பெறலாம்.

அ. இரா. கண்ணப்பர்,
59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

மணி மொழிகள்!

திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அன்பனே!

கலங்கிய நீரைத் தேற்றாங் கொட்டையால் தெளிய வைப்பது போல், இறைவனுடைய திருமந்திரத்தினால் உன் உள்ளம் தெளிவடையும். தெரிந்த உள்ளத்தில் இறைவனுடைய காட்சி தோன்றும்.

இறைவன் உன் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும்.

குப்பை நிறைந்த இடத்தில் நீ இருக்க அருவருப்புக் கொள்வாயன்றோ?

அதுபோல் காமம், கோபம், வஞ்சனை, சூது புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்க மாட்டான்.

ஆனபடியால், சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி, அன்பு என்ற சந்தனம் தெளித்து, அறிவு என்ற விளக்கேற்றி, உண்மை என்ற தூபம் கமழ வை; இறைவன் எழுந்தருளுவான்.

உன் உடம்பின் இரு பகுதிகளையும் காண வேண்டுமானால் நீ என்ன செய்கின்றாய்?

இரண்டு கண்ணாடி கட்கு நடுவே நிற்கின்றனையன்றோ? அதுபோல் திருவருள், குருவருள் என்ற இரு கண்ணாடிகளின் உதவியால் இறைவனுடைய ஞான வடிவைக் காணலாம்.

கோயிலில் புறக்கண் கொண்டு கண்ட இறைவனை உள்ளமாகிய கோயிலில் உள்ளக் கண்ணால் காண முயற்சி செய். இறைவனுடைய சொரூபம் உனது உள்ளக் கமலத்தில் விளங்குவதாக. அந்தக் காட்சி தான் சிறந்த காட்சி. அக் காட்சியால் வரும் இன்பத்தை வேறு எதனாலும் பெற முடியாது.

விளக்கு ஒரு நிறமுமில்லை. ஆனால் பல நிறங்களுடைய கண்ணாடிக் கூட்டுக்குள் அவ்விளக்கு எரிகின்றபோது பச்சை நிறமுடைய கண்ணாடியின் பக்கம் நின்று பார்த்தால் பச்சையாகவும், சிவப்பு நிறமுடைய கண்ணாடியின் பக்கம் நின்று பார்த்தால் சிவப்பாகவும், நீல நிறமுடைய கண்ணாடியின் பக்கம் நின்று பார்த்தால் நீல நிறமாகவும் தோன்றும். நிறமில்லாத விளக்கு கண்ணாடியால் நிறத்தைத் தாங்கியது போல் தோன்றுகிறது. அதுபோல் சாதகன் எந்த எந்த வடிவாக ஆண்டவனை வழிபடுகின்றானோ இறைவன் அந்த அந்த வடிவைத் தாங்கி அருள் புரிகின்றனன்.

சென்னை
வாசகர்கள் கருத்தரங்கம்!

சென்னை மாநகரில் உள்ள 'மூலிகை மணி' வாசகர்கட்கு ஒரு வேண்டுகோள்! அடுத்து வரும் மூலிகை மணி இதழ்களில் புதிய வடிவங்களும், புதிய ஆய்வுகளும் வெளியிட இருக்கிறோம். மூலிகை மணி அலுவலகம், சென்னையில் இருப்பதால், சென்னை வாசகர்களை அவ்வப்போது சந்தித்து, அவர்களின் கருத்துகளுக் கேற்றவாறு மூலிகை மணியை மேன்மைப்படுத்த விரும்புகிறோம். அத்துடன், ஆண்டுக்கொரு முறையாவது, மூலிகைக் கண்காட்சி கருத்தரங்கு போன்றவற்றை நடத்த எண்ணியுள்ளோம். சென்ற ஆண்டு பல்வேறு இடர்ப்பாடுகளால் நடத்த இயலாமற் போய் விட்டது. இவ்வாண்டு சென்னை வாசகர்களின் கருத்தறிந்து மேற்கொண்டு செயல்பட எண்ணம்.

எனவே, "சென்னை வாசகர்கள் கருத்தரங்கம்" என்ற ஒரு அமைப்பினை ஏற்படுத்தி, அதன் மூலமாக, வாசகர்களை மாதம் ஒரு முறையேனும் சந்திக்க திட்டமிட்டுள்ளோம்.

இந்த அமைப்பில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள், அன்பு கூர்ந்து கடிதம் எழுதவும். இந்த வாசகர் அமைப்பின் இயக்கத்திற்கோ, அல்லது கண் காட்சி, கருத்தரங்கிற்கோ, பிறவற்றிற்கோ, எக் காரணம் பற்றியும் உறுப்பினராகும் வாசகர்களிடம் பணம் கேட்கப்பட மாட்டாது.

இது போன்ற அமைப்பின் முக்கிய பணி என்னவெனில், 'அறிவு' என்பது ஒருவழிப் பாதை அல்ல! திறமையான வாசகர்களிடம் செறிந்த 'மருத்துவ அறிவு' புதைந்திருப்பதை எங்களால் உணர முடிகிறது. போதிய ஊக்கமும், ஆக்கமும் இல்லாமையால், அவர்களின் அறிவினை வெளிப்படுத்த இயலாமற் போகிறது.

அத்துடன் சிறந்த சித்த மருத்துவர்கள் சிதறிக் கிடக்கின்றனர். அவர்களை ஒருங்கு படுத்தி, ஒழுங்கான அமைப்பினை உருவாக்கும் முயற்சியில் "சென்னை வாசகர் கருத்தரங்கம்" முதற்படியாக இயங்கும்.

"மூலிகை மணி" யின் சித்த மருத்துவ ஆய்வுப் பணிகளை மேலும் சிறப்பாகச் செய்ய வாசகர்களுடன் கலந்துரையாட ஒரு வாய்ப்பாகவும் இக் கருத்தரங்கைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

மூன்றாவதாக, நல்லவற்றை தனி ஒருவன் கூறிக்கொண்டிருந்தால், அதனை அரசாங்கம் பெரும்பாலும் காதில் போட்டுக் கொள்வதில்லை. ஒரு இயக்கமாகி, இணக்கமான ஒரு குரலில் கூறும்போது தான் அரசின் காதில் விழுகிறது. இவ் வகையில், அரசாங்கத்தின் கவனத்தை 'சித்த மருத்துவம்' பால் ஈர்க்கும் வகையில் 'சென்னை வாசகர் கருத்தரங்கு' ஒரு இயக்கமாகி, பல ஆக்கப்பூர்வமானத் திட்டங்களை பரிந்துரைக்கவும் பயன் படுத்தப்படும்.

இம் மூன்று நற்பணிகளையும் வாசகர்கள் துணையின்றி செய்ய இயலாது. எனவே, 'சென்னை வாசகர்கள் கருத்தரங்கம்' பற்றி வாசகர்களின் கருத்துரையையும், உறுப்பினராகச் சேரும் அன்பர்கள் விருப்ப மடலையும் எதிர்பார்க்கின்றோம்.

வாசகர்கள் கருத்தறிந்து, "சென்னை வாசகர்கள் கருத்தரங்கை" துவக்க ஆவல். அதற்குள் வாசகர்கள் தமது கருத்தினைத் தெரிவிக்கக் கோருகிறோம்.

— துணை ஆசிரியர்.

மகா மூலிகை எண்ணை!

- காலில் ஆணி,
- தோலைப்பற்றிய நோய்கள்,
- வெண்குட்டம்,
- உடலில் அசுத்தநீர்த் தேக்கம்,
- ஊளைச் சதை,

போன்ற கொடிய நோய்களை வேருடன் களைய மேற்கண்ட "மகா மூலிகை எண்ணை" யைப் பத்தியமுடன் சாப்பிட ஆச்சர்யமடையும் வகையில் குணமாகும். மேக நோய்கள் உடையவர்களுக்கு இந்த எண்ணை ஓர் சிறந்த மருந்தாகும். ஷை எண்ணையைப் பெற விரும்புவோர், 20-காசு தபால் தலையுடன் எழுதவும்.

எலுமிச்சைப் பழ மணப்பாகு!

1)	எலுமிச்சைப் பழச்சாறு	—	400 மில்லி
2)	சீனு கற்கண்டு	—	350 கிராம்
3)	சுக்கு	—	35 கிராம்
4)	சாதிக்காய்	—	15 மி. கிராம்
5)	சாதிப்பத்திரி	—	15 மி. கிராம்
6)	பச்சைக் கற்பூரம்	—	3 மி. கிராம்
7)	குங்குமப்பூ	—	5 மி. கிராம்
8)	பன்னீர்	—	100 மில்லி

எலுமிச்சைப் பழ ரசம் கால்படி எடுத்துக் கொண்டு நன்ருக வடிக்கட்டி, அதில் சீனு கற்கண்டு தூள் செய்து போட்டு தனியே அடுப்பில் ஏற்றவும். இதனை தேன் பதமாக காய்ச்சி எடுக்கும் போது சுக்கு, சாதிக்காய், சாதிப்பத்திரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ ஆகியவைகளை பசுநெய்யில் வறுத்து அம்மியில் வைத்து பன்னீர் விட்டு அரைத்து, மேற் கண்ட கலவையில் கலந்துக் கொண்டு கலக்கி, பத்திரமாக கல் கார்க்கு உள்ள சீசாவில் எடுத்து வைக்கவும்.

இதனை இரண்டு தேக்கரண்டியளவு எடுத்து அப்படியே காலை மாலை பருகி வரலாம் அல்லது ஆழாக்கு தண்ணீரில் கலந்து பருகலாம். இதனுல் ஆயாசம், தாகம் தீரும். அம்மையில் உண்டான தேகக் கொதிப்பு அடங்கும். கீழும் மேலும் வெளியாகும் இரத்தப் போக்கை நிறுத்தும். மார்பு எரிச்சல் நீங்கும். வாய்ப் புண் வராமல் தடுக்கும். நேர்வாள வித்து, ஆமணக்கெண்ணெய் இவைகளால் அதிகம் பேதி யானுல் இம் மணப்பாகு சிறிது கஞ்சியில் சேர்த்து குடித்தால் அதன் வேகத்தை முறிக்கும்.

புதிய கட்டுரைத் தொடர் :—   [விவாதத்திற்குரிய கட்டுரை]

பலராமய்யாவிற்கு மறுப்பு!

"TO EVERY ACTION THERE IS AN EQUAL AND OPPOSITE REACTION"

என்பது நியூட்டன் என்னும் அறிவியலறிஞர் கண்டுபிடித்த புவிஈர்ப்புக் கொள்கைகளில் ஒன்று.

அறிவியலுக்குப் பொருத்தமான இந்த கொள்கை, இந்த கட்டுரைப் பகுதிக்கு முற்றிலும் பொருந்துவதாகும். எந்த ஒரு கருத்துக்கும் எதிரிடையான கருத்து தோன்றும் போது தான், அந்த கருத்து வலிமையும் வளர்ச்சியும் பெறும். இதனை "விவாதத்தின் மூலம் தான் விவகாரமே" பிறக்கும் என்று வழக்கில் கூறுவார்கள்.

"விவாதத்திற்குரிய கட்டுரை" என்ற தலைப்பில், இனி வரும் இதழ்களில் 'மருத்துவத் தொடர்பான' சிறப்பானவர்களின் கருத்துக்கள் வாசகர்களால் விவாதிக்கப்படும்.

முதல் கட்டுரை இந்த இதழில் வெளியாகிறது.

கடந்த சித்திரை இதழில், திரு. பலராமய்யா அவர்கள், 47-ம் பக்கத்தில் "சித்த மருத்துவத்தில் மலடு என்பது பெண்களுக்கே உரித்தானது" என்று கூறியுள்ளார்.

அவரின் இக் கருத்தை மறுத்து, சீர்காழி அன்பர் S. M. கந்தசாமி பிள்ளை அவர்கள்,

"சித்த மருத்துவத்தில் மலடு என்பது பெண்களுக்கே உரித்தானதாகச் சொல்லப்படவில்லை"

என்று மறுத்து கீழ்க்கண்டவாறு ஆய்வுரை கூறுகின்றார். இருவரின் எதிரிடை கருத்து மோதல்களால் நமக்குக் கிடைப்பது, மறைந்துபோன சித்த மருத்துவ உண்மைகள்.

எனவே, வாசகர்கள் இந்த 'புதிய பகுதியை' ஆழ்ந்து படித்து, சித்த மருத்துவத்தின் நுட்பங்களையும், திட்பங்களையும் அறிய அழைக்கிறோம். ஆழ்ந்த அனுபவ மிக்க சித்த மருத்துவர்களும், பிற துறை மருத்துவர்களும் கூட,

'விவாதத்திற்குரிய' கட்டுரைப் பொருளைப் பற்றித் தம் கருத்துக்களை எழுதி அனுப்பலாம். இனி, திரு. S. M. கந்தசாமி பிள்ளை அவர்கள் பலராமய்யாவிற்கு அளித்த மறுப்பினைக் கீழே காணலாம்.

திரு. வி. பலராமய்யா அவர்கள் தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி

சித்த மருத்துவத்தில் மலடு என்பது
பெண்களுக்கே உரித்தானதாகக் கூறப்படவில்லை!

'அகத்தியர் கர்ப்பக் கோள்' 26-ல் 5-வது பாட்டு

"இசைந்த தொரு பெண்மலடு எங்குமில்லை
எதனாலே மலடான சேதிகேளு
அசைந்திருக்கும் பேயாலும் பித்தத்தாலும்
அடிவயிறு நொந்துவரும் வாயுவாலும்
பிசைந்த கர்ப்பப் புழுவாலும்; கிரகத்தாலும்
பிணியாலும் மேகம் வைசூரியாலும்
துசங்கெட்ட கலவியில் பூ ஒதுங்கி துலங்காமற்
பிள்ளை இல்லை சொல்லக்கேளே."

'அகத்தியர் கர்ப்பக் கோள்' 26-ல் 11-வது பாட்டு

"பாரப்பா பெண்மலடங் கர்ப்பக்கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
ஆரப்பா ஆண்மலடேயாகும் அல்லால்
அப்பனே பெண்மலடு யாருமில்லை
நேரப்பா தவமிருந்தும் பொருளை ஈந்தும்
நேராக இல்லையது சூலையாலே
வேரப்பா தேவதையோ ஏழாங்கர்ப்பம் விரித்து
நன்ருய் புகலுகிறேன் விரும்பிக்கேளே."

பின் கருக்குழி தொடர்புடைய ஆறு நோய்களும், அவைகளுக்கு நிவர்த்தி மார்க்கமும் கூறுகிருர்.

ஆகவே, சித்த மருத்துவத்தில் 'மலடு' என்பது பெண்களுக்கே உரித்தானதாகச் சொல்லப்படவில்லை என்பதை சித்த மருத்துவர்கள் அறியாமலிருக்க நியாயமில்லை.

கர்ப்ப உற்பத்தி இரகசியம்

நக்கீரர் அருளிச் செய்துள்ள திருமுருகாற்றுப் படையில் ''பூத்து நீராடிய பின் ஈராறு நாளும்'' என்று கரு உயிர்ப்புக்கு கால அளவு கூறுகிறார். அதாவது 'மாத விலக்கு' ஏற்பட்ட பிறகு உள்ள 12-நாட்களே கரு உயிர்ப்புக்கு ஏற்ற காலம். புணர்ச்சிக் காலத்தில் ஆடவனிமிருந்து வெளியேறும் விந்து யோனித்துவாரத்தின் வழியாக கருப்பையின் முகத்துவாரத்தினுட் பீச்சிடுவதுடன் அவனுடைய பணி முடிவடைந்து விடுகிறது. பிறகு கருதரிப்பது, வளர்ப்பது, வெளிப்படுத்துவது முதலான காரியங்களை பெண்ணே தாங்கி நடத்துகிறாள். இந்த கரு உயிர்ப்பில் பெண் வகிக்கும் பங்கு தான் மிக மிக முக்கியமானதாகும்.

கர்ப்பப் பையின் பின்பகுதியிலிருந்து இருபுறங்களிலிருந்து (Fallopian Tubes) சினைப்பாதைக் குழாய்கள் உள்ளன. அவற்றின் இறுதியில் (Ovaries) சினைப்பைகள் திராட்சைக் குலைகள் போல் உள்ளன. ஆடவர்களுக்கு எப்படி இரு பீஜங்கள் இருந்து பணியாற்றுகின்றனவோ, அது போன்றே இந்த சினைப்பைகளும் செயலாற்றுகின்றன. ஒவ்வொரு புறத்து சினைப்பையும் ஒரு வருடம் செயலாற்றிப் பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளுகிறது. பிறகு மறுபக்கத்துச் சினைப்பை செயலாற்றத் தொடங்குகிறது.

இந்த சினைப்பையிலிருந்து மாதம் ஒரு முட்டை (Ovum) உருவாகி முதிர்ந்து உள்ள நிலையில் சினை வெடித்து வெளிப்பட்டு சினைப்பாதை வழியாக கர்ப்பப் பையை வந்து அடைகிறது.

புணர்ச்சி முடிவில் வெளியாகும் விந்து கர்ப்பப் பையின் முகத்துவாரத்தில் பீச்சப்பட்டு உட்புகுந்து செல்லும்போது, அவ்விந்துவில் இருக்கும் உயிர்க் கிருமிகளில் ஒன்று வேகமாக முன்னேறி முட்டையை (Ovum) சந்தித்து ஒன்றுபட்டு விடுகிறது. இதிலிருந்து தான் கரு உற்பத்தி ஆரம்பமாகிறது.

அபூர்வமாக சினைப்பையிலிருந்து ஒரு முட்டைக்கு மேலும் உருவாகி வெளிப்படுவதும் உண்டு. அதன் பலனாக கர்ப்பத்தில் இரண்டு மூன்று குழந்தைகளும் உண்டாவது உண்டு.

பட்டினத்தடிகளின் பாடலில், "ஒழுகிய விந்தில் ஊறு சுரோணிதம்" என்று வருகிறது. யோனி லிங்கத்திலிருந்து நாதம் (clitoris) வெளிப்படுகிறது என்று கருதுகிறார்கள். ஆனால் தற்கால அறிவியல் பேரறிஞர்கள், புணர்ச்சியில் பெண்ணுக்கு இன்பபூர்த்தி அடையும் போது யோனியில் எவ்வித திரவமும் வெளிப்படுவதில்லை என்றும், அதை (Nervous Explosion) நரம்பு முகிழ்த்தல் என்றே குறிப்பிடுகிறார்கள். — Ref. Kenneth Walker.

கரு உற்பத்திக்கு ஆடவனுடன் புணர்ச்சி செய்ய வேண்டும் என்பது அவசியம் அல்ல என்றும், பீச்சாங்குழல் மூலம் விந்தை கர்ப்பப் பையில் பீச்சிடுவதே போதுமானது என்றும் கண்டறியப் பட்டுள்ளது.

ஆணும் — பெண்ணும் சேரும்போது விந்துவும் நாதமும்

(1) ஒரே வேகத்தில் பாய்ந்து சேருவதால்
பிள்ளைப்பேறு உண்டாகும்.

(2) நாதம் முற்பட்டோ அல்லது விந்து முற்பட்டோ
ஆயிடின் கர்ப்பம் உண்டாகாது.

என்ற (வி. பலராமய்யாவின்) இந்த இரண்டு கருத்துக்களும் பிழைபட்டனவாகும்.

புணர்ச்சியில் பெண்ணுக்கு இன்பபூர்த்தி ஏற்படவேண்டும் என்ற நியதி இல்லாமலே கரு தரிக்கிறது! என்பது

அனுபவ பூர்வமாக, ஆராய்ச்சி வாயிலாக

கண்டறிந்த உண்மையாகும். ★

திரு. கந்தசாமி பிள்ளை அவர்கள் கூறும் மேற்கண்ட இரு கருத்துக்களைப் பற்றிய விவாதக் கருத்துக்களை, சித்த மருத்துவம், ஆங்கில மருத்துவம், ஓமியோபதி மருத்துவம் பயின்ற மருத்துவ வாசகர்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம். — ஆசிரியர்.

ஆபத்தான நிலைமையா? இதோ முதலுதவி!

எதிர்பாராது ஏற்படும் விபத்துக்களால் சில நேரங்களில் உயிருக்கு அபாயம் ஏற்படுவதுண்டு. மயக்கமடைதல், மூச்சு அடைத்தல், இரத்தம் கொட்டல் போன்றவை ஏற்படும். இப்படிப் பட்ட அபாய நிலைமைகளை மருத்துவர் வரும் வரை அப்படியே விட்டு விடுவது உயிருக்கே ஆபத்தாக முடியும். முதலுதவியாக சிலவற்றை மருத்துவர் வரும் வரை மேற்கொண்டால், உயிருக்குப் பாதுகாப்பும், சிலநேரங்களில் மருத்துவர் உதவிகூட தேவையின்றி குணம் பெறலாம். ஆபத்தான நிலைமை வரும்போது யார் வேண்டுமானாலும் உடனடியாக கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான எளிய வழிகளை கீழே கொடுத்துள்ளோம்.

(1) ஆபத்தான நிலைமைக்குள்ளானவரை, உடனடியாக தரையில் நெடுக்கப் படுக்க வைக்கவும். தலையில் அடிபட்டிருந்தால் தலையை மட்டும் சற்று உயர்த்தி வைக்கவும்.

(2) எக்காரணத்தைக் கொண்டும் படுக்க வைத்தப்பின் அசைக்க வேண்டாம். எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பின் ஒடிந்த எலும்பை, கூடியவரையில் பொருத்தி அப்படியே அசையாமல் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லவும்.

(3) மயக்க நிலையிலோ, அல்லது படுகாயமுற்றவர்களுக்கு மூச்சு சரிவர போய் வருகிறதா என்று கவனிக்கவும், சுற்றுப்புறம் நன்ருக காற்று வருமாறு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

(4) உணவு, இரத்தம், போன்றவை வாய், தொண்டை ஆகிய வற்றில் அடைத்திருந்தால், உடனடியாக, விரல்விட்டு அவற்றை வெளியேற்றி விடவும். கைகுட்டை கொண்டு விரலைச்சுற்றி அதன்பிறகு வாயினுள் விட்டு அவற்றை வெளியேற்றுவது சிறந்தது.

(5) வெட்டுக்காயம் போன்றவற்றினுல் அதிகமான இரத்தப் போக்கு ஏற்படும் போது, தூய்மையான துணியால்காயம் பட்ட இடத்தை அழுத்தவும். இரத்தப்போக்கு நிற்கும் வரை துணியால் அழுத்தவும்.

(6) மயக்க நிலையில் உள்ளவர்கட்கு வாயின் வழியாக எவ்வித உணவையும் செலுத்த வேண்டாம்.

(7) உடல் சூடு குறையாமல் இருக்க போர்வையை மூடி சூட்டினைப் பாதுகாக்கவும்.

இந்த ஏழு முதலுதவிகளைச் செய்வதன் மூலம், அபாய நிலையில் உள்ள நோயாளியின் உயிரை மருத்துவர் வரும்வரை பாதுகாக்கவும் உதவும். நோய் மேலும் சீர்கேடு அடையாதவாறு தடுக்கவும் முடியும்.

வருமுன் காப்பதே உயிர் காக்கும் வழி!

உ

முருகா.

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்படமாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவை கட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி—பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கபட மாட்டாது. கூடிய வரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்]

* * *

கே: ஐயா, உணவு உண்ணும் போது பகல் நேரத்தில் வியர்வை ஆருகப் பெருகி வழிகிறதே, இது உடம்பில் நோய் உள்ளது என்பதற்கான அறிகுறியா? விளக்கவும்.

ப: உணவு உண்ணும் போது, கோடையிலே வியர்வை வெளியாவது இயற்கைதான்; ஆனாலும் 'ஆருகப் பெருகி' வழிவது நோய்க்கு அறிகுறிதான். இதனை நேரில் கவனித்துத்தான் இன்ன வியாதி என்று கூற முடியும்.

கே: ஐயா, நான் திருமணமான இளைஞன். வயது 30. நான்கு குழந்தைகளை உடையவன். 'தினமணி சுடர்' வாயிலாக தங்களின் 'துளசி' பற்றிய ஆய்வுக் கட்டுரையை படித்தேன். துளசியின் சாற்றை எலிகளுக்குக் கொடுத்த போது கருச்சிதைவு ஏற்பட்டதை அறிந்தேன். நான் காலையில் துளசி இலையைச் சாப்பிட்டு வருகிறேன். இதனல் எனக்கு உயிரணுக்கள் குறைந்து இனி குழந்தைகள் இல்லாமல் இருக்க வழி உண்டாகுமா?

ப: ஐயா, எலியின் உடலமைப்புக்கும், மனித உடலமைப்புக்கும் எத்தனையோ மாறுபாடுகள் உள்ளது. எலிக்குக் கொடுத்து

ஆராய்ச்சி செய்து, அதனை மனிதனுக்கு ஒப்புமை கூறுவது பொருந்தாது. துளசி இலையாலும் சாற்றாலும் 'உயிரணுக்கள்' குறையுமானால் கோயில்களில் துளசி தீர்த்தம் தரமாட்டார்கள். துளசி விதை 'தாதுவை' வலிமைப் படுத்தக் கூடியது என்பதைத் 'துளசி' கட்டுரையில் காணலாமே! துளசி இலை சிறந்த கிருமி நாசினியாகும். அதனை பயன்படுத்துவது நன்மையே தவிர தீமை இல்லை என்பது அனுபவம் உணர்த்தும் உண்மை. குழந்தைகள் பெறாமல் இருக்க ஒரே வழி – சிறந்த வழி காந்தியடிகள் கூறும் மனக் கட்டுப்பாடுதான். மற்ற வழிகளெல்லாம் ஏ 'மாற்று' வழி. ஆபத்தான வழிகளாகும்.

கே: ஐயா, ஒருவருக்கு நீர்வேட்கையே (தாகம்) ஏற்படுவதில்லை. காரணம் என்ன?

ப: நீர்வேட்கை இல்லாமல் இருப்பது குற்றமே. உடம்பில் நிறையக் குளிர்ச்சி (சீதளம்) இருக்கின்றது என்பதே காரணம். இதனால் நரம்புகள் தாக்கப்பட்டு வாதம் தொடர்பான பிணிகள் ஏற்படும், குளிர்ச்சியான காய்கறிகளைத் தவிர்த்து சூடான காய்கறிகளை உணவில் சேர்ப்பதன் மூலம் ஓரளவிற்கு குளிர்ச்சியைத் தடுக்கலாம். எனினும் சிறந்த சித்த மருத்துவரிடம் தெளிவு செய்து தக்க மருத்துவம் பெறவும். அல்லது நேரில் வரவும்.

கே: ஐயா, எனக்கு வயது 23. பற்பசைகளைக் கொண்டு 'பிரஷ்' உபயோகித்து பல் துலக்கி வருகின்றேன். ஆனால் என் பற்களில் சில வற்றில் ஈறு விலகி பற்கள் தளர்ந்து ஆட்டம் கொண்டுள்ளன. அவ்வப்போது வலியும் உண்டு. இவை நீங்க தக்க ஆலோசனை கூறவும்.

ப: வண்ண விளம்பரங்களில் மனதைப் பறிகொடுத்துப் பல் நோயை விலைக்கு வாங்கிக் கொண்டவர்களுக்கெல்லாம் என்ன கூறுவது? 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்ற ஔவை மொழியைத் தான் கூற வேண்டும். ஆலமர விழுது பற்களையும் அதன் ஈறுகளையும் பாதுகாக்கும். வேலம்பட்டையின் தூளும் ஈறுகளுக்கு வலிமை தரும்.

1.	கடுக்காய் (கொட்டை நீக்கியது)		125 கிராம்
2.	சுக்கு (புறத்தோல் நீக்கியது)		35 ,,
3.	மிளகு	—	20 ,,
4.	படிகாரம்	—	10 ,,

இவை யாவற்றையும் நிழலில் உலர்த்தி, தூய்மை செய்து இடித்து புடைத்து சலித்து வைத்துக் கொண்டு, அத்துடன் கடலை மாவு 175 கிராம் எடுத்து கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் காலை மாலை

இரு வேளையும் பல் துலக்கி வரவும். உணவு உட்கொண்ட பின்பு வாயை நன்ருகக் கொப்பளித்து பற்களின் இடுக்குகளில் உள்ள உணவுத்துகள்களை வெளியேற்றவும். ஈறு வலிவு பெற்று பற்கள் தூய்மை அடையும்.

கே: ஐயா, என் வயது 18. நான்கு ஆண்டுகளாக என் மூக்கில் சில நேரங்களில் குருதி சளியுடன் கலந்தும் தனியாகவும் வெளியேறுகிறது. குளிர் காலத்தில் அதிகமாகவும், கோடை காலத்தில் குறைவாகவும் வெளி யேறுகிறது. இதனை நீக்க ஒரு எளிய சிகிச்சை கூறவும்.

ப: அன்புடையீர்! முசுமுசுக்கையின் சாற்றை குருதிப் போக்கு ஏற்படும்போது மூக்கின் அருகில் வைத்து முகரவும். மற்றைய நேரங்களில் முசுமுசுக்கை இலையை அரைத்து 'தோசை மாவில்' கலந்து நெய் விட்டு தோசை விட்டுக் காலை நேரம் மட்டும் சாப்பிட்டு வரவும். குருதிப் போக்கு நிற்கும்.

கே: ஐயா, 'அம்பர்' என்ற மருந்து எப்படி செய்வது? அதனை எந்த நோய்க்குப் பயன்படுத்துவது?

ப: அம்பர் என்பது செயற்கையாகச் செய்யப்படும் மருந்தல்ல! திமிங்கிலத்தின் மணிக்குடல்களில் உண்டாகும் ஒருவித சத்து. இதை கடலின் தண்ணீர் மேல் சில இடங்களில் காணலாம். சாம்பல் நிறத்தில் சிறு சிறு துண்டுகளாகக் காணப்படும். பச்சையாக இருக்கும் போது தூள் செய்யலாம். நரம்புகளின் இரத்த ஓட்டத்திற்கும், தாது பலத்திற் கும் பெரிதும் பயன் தரும். 'சூதக சன்னி' என்னும் நோய்க்கு இதனை பயன்படுத்தலாம். யூனுனி மருத்துவர்கள் 'அம்பரை' பயன்படுத்து வதில் தனித் திறமை பெற்றவர்கள்.

கே: வண்டு, கம்பளிப்பூச்சி, கடித்து விட்டால் அதனுல் ஏற்படும் தீமைகள் என்ன? அதனைப் போக்கும் மூலிகை சிகிச்சை என்ன?

ப: வண்டு கடித்து விட்டால் வீக்கம், தினவு, உடல் தடிப்பு, நுரையுடன் கூடிய பேதி காணும். இதனைப் போக்க சங்கன் வேர்ப் பட்டையை அரைத்து சுண்டைக் காயளவு சாப்பிடத் தீரும்.

கம்பளிப் பூச்சி கடித்து விட்டால், குத்தல், கொப்புளம், காய்ச்சல், வாந்தி ஆகியன உண்டாகும். குப்பைமேனி இலையை இடித்துப் பிழிந்து சாறு எடுத்து அதில் சிறிது உப்பும், மஞ்சளும் கலந்து கடிவிடம் நமைச்சல் உள்ள இடமெங்கும் தடவி வர குணமாகும்.

எமது "விஷ ஜந்துக்களும் மூலிகைகளும்" என்ற நூலை வாங்கிப் படியுங்கள்! இது போன்ற எளிய சிகிச்சை முறைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கே: சேப்பங்கிழங்கை உண்பதால் என்ன பயன்? அதனை அடிக்கடி உணவில் சேர்க்கலாமா?

ப: 'சேப்பந் தண்டு' உடலுக்கு நல்லது. காயம் பட்டால் ஏற்படும் இரணங்களை, விரைவில் குணப்படுத்தும் ஆற்றல் இவற்றிற்கு உண்டு. ஆனால் கிழங்கு அவ்வளவாகப் பயன் தராது. அடிக்கடி இக் கிழங்கை உணவில் சேர்க்கக் கூடாது. மாதம் ஒரு முறை பயன்படுத்த லாம். அடிக்கடி பயன்படுத்தினால் கோழையை அதிகமாக்கி, வாத, கப நோய்களை உண்டு பண்ணும்.

கே: 'சீயக்காய்'த் தூளைப் பயன்படுத்துவதால் என்ன பலன்? இது வும் ஒரு மூலிகை இனமா?

ப: 'சீயக்காய்' என்பது மூலிகை இனம் தான். 'சீகாய்' என்று கூறுவார்கள். Acacia Concina என்பது ஆங்கிலப் பெயர். எண்ணெய் சிக்குகளை விரைவில் போக்குவதில் 'சீயக்காய்' மிகவும் சிறந்தது. அதனால் தான் எண்ணெய் முழுக்கின் போது இப் பொடியைப் பயன் படுத்துகிறார்கள். அத்துடன் பித்த ஆதிக்கத்தினைக் குறைக்கும் சக்தி யும் உண்டு.

கே: 'எச்சில் தழும்பு'க்கு சீமை அகத்தி இலையைப் பயன்படுத்தலாம் என்கிறார்கள். என் வீட்டில் சீமை அகத்தி நிறைய உள்ளது; அதனை எங்ஙனம் பயன்படுத்தலாம்?

ப: சீமை அகத்தி இலை 'புறத்தோலில்' காணும் பல நோய் களுக்கு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. இதன் இலையை நன்றாகக் கழுவி, அதனுடன் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து, 'எச்சிற் தழும்பு' உள்ள இடத்தில் பற்று போடலாம். தழும்பு மறையும்.

கே: மலையில் கிடைக்கும் தேன் சிறந்ததா? மரத்தில் கிடைக்கும் தேன் சிறந்ததா?

ப: நல்ல கேள்வி! தேனில் ஏழு விதமான பிரிவுகள் உண்டு.

1. மலைத்தேன்:

இது காய்ச்சல், உடல் சூடு, விக்கல், ஆகியவற்றிற்கு மிகவும் நல்லது. மருந்துகளை அனுபானிக்க இது மிகவும் சிறந்தது.

2. கொம்புத் தேன் :

இது வாய்க் கசப்பு, உள மாந்தம் ஆகியவற்றைப் போக்குவதில் சிறப்புடையது.

3. மரப் பொந்துகளில் கிடைக்கும் தேன் :

இது சூட்டை உண்டாக்கி, மூலச்சூட்டை கொடுக்கும். இருமல், மூச்சுத் தடை ஆகியவற்றைப் போக்க உதவும்.

4. புற்றில் கிடைக்கும் தேன் :

கண் நோய்கள், ஈளை, கப நோய்களைப் போக்குவதில் இவ் வகைத் தேன் பயன்படும்.

5. வீடுகளில் கிடைக்கும் தேன் :

இது சிலேத்தும நோய்கள், கரப்பான், விரணங்கள், புழுவெட்டு ஆகியனவற்றைப் போக்கும்.

6. புதிய தேன் :

புதிய தேன், உடல் வெப்பம் தந்து, உடலுக்கு புதிய ஒளி தரும். உடல் பொன் வண்ணமாகும்.

7. பழைய தேன் :

பழைய தேன் புளிப்பும் — இனிப்பும் கலந்து காணப்படும். வாத நோய்களையும், வயிற்றெரிச்சலையும் உண்டாக்கும்.

இவை தவிர, தற்போது சில கடைகளில் விற்கப்படும் தேன், அசல் தேனல்ல! சர்க்கரைப் பாகு கலக்கப்பட்டதாகும். இதனால் எவ்வித பலனும் கிடைக்காது. இதனை வாங்க வேண்டாம்.

தேன் மலர்கட்கு ஏற்றவாறு குணம் மாறுபடும். உடலுக்குப் பொதுவாகச் சிறந்தது மலைத்தேன். மருந்துக்குப் பயன்படுவது கொம்புத் தேன்.

கே : வெற்றிலையைத் தாம்பூலமாக மட்டும் தான் பயன்படுத்தலாமா? மருத்துவமாகப் பயன்படுத்துவது எப்படி?

ப : வெற்றிலையை தாம்பூலத்தில் மட்டுமின்றி, சித்த மருத்துவர்கள் மருத்துவத்தில் தவறுமல் பயன்படுத்துவார்கள். குறிப்பாக, கப நோயால் வரும் இருமலும், ஆஸ்துமாவினுல் வரும் மூச்சு முட்டலும் தணிய மார்பின் மேல் வெற்றிலையை வதக்கிக் கட்டலாம். தாய்ப் பால் சுரக்க வெற்றிலையை தனங்களின் மீது வதக்கிக் கட்டலாம். வெற்றிலை சித்த மருத்துவர்களின் உற்ற நண்பனுகும்.

கே : என்னுடைய வயது 20. கடந்த 5 ஆண்டுகளாக மலச்சிக்கல் உள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக ஆரம்ப பைத்திய நிலையில் இருக்கின்றேன். ஏராளமான ' ஆபாச ' சினிமாக் காட்சிகளும், வெறியுணர்ச்சியூட்டும் புத்தகங்களைப் படித்ததினால் இந்நிலை ஏற்பட்டதாகக் கருதுகிறேன். மகளிரைக் கண்டால் கட்டு மீறிய வெறியுணர்ச்சி உண்டாகிறது. அதிகமான புகைப் பழக்கமும், காபி அருந்தும் பழக்கமும் உடையவன். இதனால் படபடப்பும், குலைநடுக்கமும் எப்போதும் உள்ளது. கூட்டத்தைக் கண்டாலும், ஒலி, ஒளி, இவைகளைக் கண்டாலும் பயமாக இருக்கிறது. தூக்கத்தில் அடிக்கடி சக்தி வெளிப்படுகிறது. என் உள்ளுணர்வு என்னை எப்போதும் ' நீ ஒரு பைத்தியம் ' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. என்னை எல்லோரும் எள்ளி நகையாடுகிறார்கள். இதனால் ' பள்ளியிறுதி வகுப்பு ' போகாமல் நின்று விட்டேன். என்னுடைய இந்த இழிநிலை போக ஒரு நல்ல மூலிகை சிகிச்சை கூறவும்.

ப : தம்பி ! சினிமா வெறியுணர்ச்சிக்கு பலியாகி வரும் உங்களைப் போன்ற இளைஞர்கள் நாளுக்கு நாள் பெருகி வருவது வேதனைக்குரிய செய்தியாகும்.

இனியாவது திருந்தி நல்வழியைப் பின்பற்றுங்கள். எப்போதும் பெற்றோர்களுடனும், நல்லவர்களுடனும் சேர்ந்து இருங்கள். உடனடியாக திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை பெற்றோரிடம் கூறி, ஆறு மாதத்திற்குள் திருமணம் செய்து கொள்ளுங்கள். உங்கள் குறை நீங்கும்!

இழந்த உடல் சக்தியை மீண்டும் பெற, ' ஓரிதழ் தாமரை ' என்னும் ' இரத்ன புருஷ் ' மூலிகையை அதிகாலை பச்சையாக எடுத்து வந்து, நீரில் அலசி, சிறிதளவு வாயிலிட்டு நன்றாக மென்று சாப்பிடவும். பிறகு பசும் பால் ஒரு குவளை அருந்தவும். அரைக் கீரை, முருங்கைக் கீரை, பசளை ஆகிய கீரைகளையும் அடிக்கடி உணவில் சேர்த்து வரவும். பால், நெய், மோர் சாப்பிடவும். ❋ ❋

[16-ஆம் பக்கத் தொடர்ச்சி

பேராசிரியர் அனுமந்தய்யாவின் ஒரே மகள் தேவி. அரசினர் கல்லூரியில் இரசாயனப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இளமையிலேயே அறிவியல் உணர்வும், ஆய்வு உள்ளமும் கொண்டவராதலால், வேகமான வளர்ச்சி பெற்று, பல பதவிகளை வகித்து 55-வது வயதில் ஓய்வு பெற்றுள்ளார். 35-வது வயதிலேயே, ஐரோப்பிய நாடுகட்கும், கீழை நாடுகளுக்கும் இரசாயனத் துறையில் தான் கண்டுபிடித்த புதிய செய்திகளை, அந் நாட்டு அறிஞர்களுடன் விவாதிக்க கல்விப் பயணம் மேற்கொண்டு பல சிறப்புக்களையும் பெற்றவர். அத்தகைய ஆற்றல் வாய்ந்த அவருக்கு முதல் பெண் தேவி. அவளுக்குப் பிறகு இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்து, இறந்தன. வேதவல்லி அவர் மனைவி. செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். அடக்கமும், அமைதியான நடையும் கொண்டவர். தேவி பி. ஏ., படித்துக் கொண்டிருந்த போதே திடீரென்று மாரடைப்பால் இறந்து விட்டார்.

மனைவியின் இழப்பால், பேராசிரியர் அனுமந்தையா மீளா அதிர்ச்சிக்கு ஆளாகியது மட்டுமின்றி, அமைதியற்று, பேராசிரியர் பதவியில் இருந்து மூன்று ஆண்டுகள் முன்னதாகவே விலகிவிட்டார். மனைவி வழிவந்த செல்வமும், தான் சேர்த்த சொத்தும் மூன்று தலைமுறைக்கு வருமாதலால், பேராசிரியர் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இல்லை. எப்பொழுதும் காஸ்மாபாலிடன் கிளப்பில் தன் வயதொத்த நண்பர்களுடன் சேர்ந்து காலத்தை கழித்து வந்தார். ஒரே மகள் தேவிக்கு திருமணம் செய்து பார்ப்பது ஒன்று தான் அவர் தற்போது உயிர் வாழ்வதின் காரணம். அவள் இல்லாமலிருந்தால், மனைவியை இழந்து அவரால் வாழவே முடியாது.

அன்னையை இழந்த தேவி, தன் துயரத்தை, ஒருவாறு எம். ஏ., படிப்பதில் மறக்கலானாள். முதலாண்டில் அவள் படித்து வந்த போது தான், ஜே. பி. யின் சந்திப்பு நிகழ்ந்தது. ஜே. பி. யின் தந்தை, டாக்டர் இரத்தினவேல் கோவையில் புகழ் பெற்ற மருத்துவர். சிறந்த பக்தி உடையவர். தந்தையின் குணம் மைந்தனிடம் பிரதிபலித்தது. சமயம், தத்துவம், ஆகியவற்றில் ஜே. பி. மிகுந்த பற்றுடனும், வாதம் புரிவதில் ஆற்றலுடையவனாகவும் இருந்தான். அதிலும் தமிழில் எம். ஏ., படிப்பதால் சமய, இலக்கியத்தில் மிகுந்த ஆய்வுடன் கருத்துக்களை வெளிப்படுத்துவான்.

ஒரு சமயம் பல்கலைக் கழகத்தில் நடந்த ‘ தத்துவ இயல் பொதுக் கருத்தரங்கில் ’ தேவி, ‘ கிழக்கிந்திய மேற்கிந்திய ’ தத்துவங்களைப் பற்றி உரையாற்றிய போது, ஜே. பி. பல வினாக்களை எழுப்பி, எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தான் ; குறிப்பாக, தேவியின் உள்ளத்தைக் கவர்ந்தான். இங்ஙனம் கருத்தரங்கில் துவங்கிய காதல், கடந்த ஓராண்டு

காலமாக கடற்கரையில் வளர்ந்து, தேர்வு நேரம் நெருங்கியதும், கபாலீச்வரர் கோயில் வரை வந்து விட்டது.

பேராசிரியர் ஆரம்ப காலத்தில் கோவையில் பணியாற்றிய போது, டாக்டர் இரத்தினவேல் தான் குடும்ப டாக்டராக இருந்தார். ஆதலால் இருவரின் காதலுக்கு மிடையே 'சிவப்பு விளக்கு' பெற்ருேர்களால் காட்டப்பட வில்லை. மாருக, டாக்டரும் — பேராசிரியரும் இருவருக்கும் திருமணம் நடத்த காலம் நோக்கிக் காத்துக் கொண்டிருந்தனர்.

ஆனல், காதலர்கள் காத்துக் கொண்டிருக்க வில்லை. ஞாயிற்றுக் கிழமை வருவது தவறினுலும், இருவரும் கடற்கரை காந்தி சிலைக்கடியில் உட்கார்ந்து மணிக் கணக்காகப் பேசி மகிழ்வது தவருது. அவ்வப்போது திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி ஆலயத்திற்கும், கபாலீச்வரர் ஆலயத்திற்கும் சென்று வருவார்கள்.

"என்ன தேவி! அலங்காரம் முடிந்ததா?" என்று கதவைத் தட்டினுன் ஜே. பி.

"அப்பப்பா! என்ன தலை போகிற அவசரம்?" என்று நெற்றியில் குங்குமம் அணிந்து கோவிலுக்குப் புறப்பட்டாள், தேவி.

வழியில், காந்தியுடன் ஏற்பட்ட புதிய அனுபவங்களைப் பற்றி ஜே. பி. தேவியிடம் கூறினுன். முதலில் தேவி நம்ப மறுத்தாலும், பிறகு நம்பினுள்.

மாலை 7-00 மணி, ஞாயிற்றுக்கிழமை ஆதலால், கோவிலில் கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது. ஒரு வழியாக, கபாலீச்வரரையும் கற்பகாம்பிகையையும் வழிபட்டு விட்டு, 8-30 மணிக்கு, மைலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டல் சென்று சிற்றுண்டி உண்டுவிட்டு, 9-30 மணிக்கு வீடு திரும்பினுர்கள்.

மௌபரீஸ் சாலையின் மையத்திலிருந்த தேவியின் வீட்டின் முன் இரண்டு கார்கள் நின்றிருந்தன. கீழ்ப் பகுதியில் உள்ள எல்லா விளக்கு களும் எரிந்தன. 'யார் வந்திருப்பார்கள்?' என்று எண்ணியவாறு வாயில் உள்ளே நுழைந்த தேவியை நோக்கி, விரைந்து வந்த வேலைக் காரன் வடிவேலு,

"அம்மா! அப்பாவிற்கு திடீரென்று மார்பு வலி வந்துவிட்டதாக கிளப்பிலிருந்து போன் வந்தது. உடனே, நான் டிரைவரை அழைத்துப் போய் ஐயாவை கூட்டிக் கொண்டு, டாக்டரிடம் அழைத்துப் போனேன். அவர் உடனடியாக மருந்து கொடுத்து, இப்போ சுமாராக இருக்கிறது" என்று கூறினுன்.

" இப்போ அப்பா எங்கே ? " என்று பதறினுள் தேவி. " இப்போ நம் வீட்டில் தான் இருக்கார். டாக்டரும் கூடவே வந்து இருக்கின்றுர் " என்றுன்.

ஈரெட்டில் தந்தையின் படுக்கையை அடைந்தாள் தேவி, ஜே. பி. பின் தொடர. பேராசிரீயர் நினைவற்றுப் படுக்கையில் கிடந்தார். உடல் வெப்பம் தகித்தது. தந்தையின் நிலை கண்டு தேவிக்கு அழுகை பொங்கி வந்தது. ஜே. பி. ஆதரவாக அவளைத் தேற்றினுன். டாக்டர், பேராசிரீயரீன் நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு வெளியே சென்றுர். தேவி தந்தையின் அருகே அமர்ந்து தலையைக் கோதினுள்.

" டாக்டர் ! அவருக்கு இப்போ எப்படி இருக்கிறது ? எதனுலே மார்பு வலி வந்தது ? " என்று ஜே. பி. கேட்டான். டாக்டரீன் முகம் கலங்கி இருந்தது.

அப்போது, தேவியின் அழுகை உரத்துக் கேட்டது. டாக்டரும், ஜே. பி. யும் உள்ளே திரும்பி ஓடினர். (தொடரும்)

தமிழன்பர்கட்கு அரிய வாய்ப்பு !

" தமிழைப் பிழையறக் கற்றலே தமிழ் வளர்த்தல் " என்ற நல்ல கொள்கையை கடந்த 30 ஆண்டுகளாக சென்னையில் ' நக்கீரர் கழகம் ' என்ற ஒரு அமைப்பு செவ்வனே நடத்தி வருகின்றது. இக் கழகத்தின் ஆதரவில், " திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி " ஒன்று நடைபெற்று வருகிறது. புலவர் புகுநிலை, புலவர் முதனிலை, புலவர் நிறைநிலை, தமிழ் எம்.ஏ., ஆகிய படிப்புகளுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. சென்னையில் வாழும், புகழும் - புலமையும் நிறைந்த இருபது தமிழாசிரியர்கள் அன்புப் பணி ஆற்றி வருகின்றனர்.

பொருள் நோக்கமின்றி அமைதியாக, தமிழறிவைப் பேணி வளர்த்து வரும், இந்த ' திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ' யை ஒரு அறிவாலயமாகக் கட்டிக்காத்து வருபவர், திரு. சிறுவை. மோகனசுந்தரம் அவர்கள் அவரின் தமிழ்ப் பணி சிறக்க, தமிழ் ஆர்வமிக்க வாசக அன்பர்கள் தமிழில் புலமை பெற விரும்பினுல், கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி தொடர்பு கொள்க.

* அரிய வாய்ப்பு ! அன்பர்கள் பயன்படுத்திக் கொள்வார்களாக !

அரிய தமிழ்ப் பணி ஆற்றிடும்
" திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி " மேலும் வளர்ச்சி பெற
வசதி உள்ள தமிழன்பர்கள்
கீழ்க்கண்ட முகவரிக்கு தாராளமாக நன்கொடை அனுப்பலாம்.

திரு. சிறுவை. மோகனசுந்தரம் அவர்கள்,
' தமிழகம் ' நெ. 27, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-81.

எமது வெளியீடுகள் :

நம் நாட்டு மூலிகைகள்	1-ம் பாகம் ரூ.	3	00
நம் நாட்டு மூலிகைகள்	2-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	3-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	4-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	5-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	6-ம் பாகம்	3	00
நோயும் மருந்தும்	1-2 பாகம்	3	00
நோயும் மருந்தும்	3-4 பாகம்	2	00
விட ஜந்துக்களும் மூலிகைகளும்		3	00
புகழ் பெற்ற மூலிகைகள்		0	60
மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்		0	60
பயன் தரும் பத்துக் கீரைகள்		0	60
சக்தி தரும் சஞ்சீவி மூலிகைகள்		0	50
குழந்தைப் பிணிகளும் மூலிகை மருத்துவமும்		0	60

ஒரு புத்தகத்திற்கு
தபால் செலவு 25-காசு சேர்த்து அனுப்பவும்.

மொத்த புத்தகமும் தபாலில் பெற
புத்தக விலையுடன் ரூ. 2—75 சேர்த்து கீழ்க்கண்ட
முகவரிக்கு மணியாடர் அனுப்பி பெறலாம்.

முகவரி :-

ஆ. இரா. கண்ணப்பர்,

மூலிகை மணி அலுவலகம்

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

Printed at Mooligai Mani (P) Press Vellore N A.
Printer, Editor & Publisher Dr. A. R. Kannappar, R M P.
59, Masilamani Mudali Street, Vellore-632001.